கணபதிதுணை

சைவப்பிரகாசனம்.

தேவாரம்.

நறுமுகைகொரியோம்பிக் கலியைவாராமே
செறுமூர்வாழதில்லைச் சிற்றம்பலமேய
முறுவெண்டிங்கள் முதல்வன்பாதமே
நறுநின்றுனைப் பற்றுடாமே.

திருச்சிற்றம்பலம்

உபோற்காதம்.

சகல லோகைக நாயகராகிய சிவபெருமானு
ஸ்கிருதபாஷையிலே அருளிச்செய்யப்பட்ட வே
வாகமங்கள், தனித்தனியே கருமகாண்டம், ஞ
காண்டம் என்னும இருவகையுடையனவாம. அ
றுட் கருமகாண்டங்களிலே கிரியாகிரமங்களும,
ஞானகாண்டங்களிலே இலக்கணப் பிரமாணங்களோ
திமுதலிய பதார்த்தங்களும் மிக விரிவாக நிரூ
கப்பட்டன.

அவற்றுள், ஞானகாண்டங்களில் நிரூபிக்கப்பட்
திமுதலிய பதார்த்தங்கள், சிவபெருமானுடைய தி
வருளைப்பெற்ற மகான்களாலே தமிழ்ப்பாஷையி
ய்யப்பட்ட சிவஞானபோதம், சிவஞானசித்தி
முதலிய உண்மைநூல்களிலே சுருக்கியும், விரி
தும நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

அங்ஙனமாயினும், அந்நூல்கள் பத்தியரூபங்களா
நத்தலினாலே பூரண வியுற்பத்திமான்களுக்கன்றி
ற்றையோருக்கு உபயோகப்படா; பூரண வியுற்பத்
மான்களுக்கும் பிணிமுதலிய ஏதுக்களாலே விவே
ப் கிளராத காலங்களில் உபயோகப்படாதனவாகும.

இங்ஙனமாக, இவ்வியாழ்ப்பாணத்துச் சுன்னைநக
ர்க்கண்ணே வேளாண்மரபிலே திருவவதாரஞ்செய்

து, சம்ஸ்கிருதத் திராவிட வியற்பன்னராகி, ஸ்ரீலஸ்ரீ வேதாரணியச் சுவாமிநாததேசிகர் அவர்களிடத்திலே கிரமமாகச் சிந்தாந்தோபதேசம் பெற்றுக் கொண்டவர்களும், இந் நீர்வேலிநகரின்கண்ணே நெடுங்காலம் இருந்து நல்லறத்தை ஒழுங்காக நடத்தினவர்களும், சம்ஸ்கிருதத்திலே பாலபாடம், இலக்கணசுருக்கம் முதலியவைகளையும், சிந்தாந்த சாராவலியின் ஞானபாதத்துக்கு ஒரு வகுப்பேடுகையையும், சிவஞானபோதத்துக்குத் தமிழிற் சிற்றுரையையும், பிரசாதசட்சுலோகிக்குத் தமிழ் வியாக்கியையையும், அகநிர்ணயத்துக்குத் தமிழ் வியாக்கியையையும், தமிழிலே சிவபுரைசயந்தாதிக்கு ஒரு விருத்தியுரையையும், சிறிய தமதகளடனமமுதலிய கத்தியரூபமாகிய சில நூல்களையும் அனுட்டானவிதி சிராத்தவிதி முதலியவைகளையும் உலோகோபகாரத்தின்பொருட்டுச் செய்தளினவர்களும், சிவ. சங்கரபண்டிதர் என்னுந் திருநாமமுடையவர்களும் ஆகிய சமியேனுடைய தந்தையார் அவர்கள், அந்த ஞானகாண்டங்களின் பொருள்களை மிகச்சுருக்கி விளக்குவதும், கத்தியரூபமும் ஆகிய இச் சைவப்பிரகாசனம் என்னுந் நூலை அதிகாரிகளாகிய எல்லாருக்கும் உபயோகமாகும்பொருட்டுச் செய்தருளினார்கள்.

இதற்கு அதிகாரிகளாவார் இயல் [illegible] இலக்கண இலக்கிய ஆராய்ச்சி செய்தவர் [illegible] சிவதீக்கை பெற்றுக்கொண்டவர்களாய் உ[illegible] சைவசமயிகள்.

இதனைக் கற்றுணர்ந்தவர்கள், சிவஞானபோதம் முதலிய திவ்வியநூல்களை ஓதியுணர்தற்கு அதிகாரிகளாவர்; ஆகலின் முதனூற்பொருளுணர்ந்து கட்டடைந்து வீடுபெறுதலே இதின்பயன்.

சைவசமயிகளே! நீங்கள் இதனைக் கிரமமாகக் கற்றுணர்ந்து உறுதிப்பயனைப் பெறும்பொருட்டு முயலக்கடவீர்கள்.

இங்ஙனம்:
நீர்வேலி.
ச. சிவபபிரகாசன்

உ

சிறப்புக்கவிகள்.

நல்லூர்

ஸ்ரீமத். ஆறுமுகநாவலர்

அவர்களை மருகரும் மாணாக்கருமாகிய

ஸ்ரீமத். ச. பொன்னம்பலபிள்ளை

அவர்கள் சொல்லியது.

சைவசிக சாதக தயாபெருமோக சாதிகளுஞ்
சைவப் பிரகாசனநூலை—சைவரிலை
பாரி குலவுப் படைதகிடூன சங்கரனும்
சேரினிலேபயனடிதன.

சுன்னாகம் ம-ா-ா-ஸ்ரீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை

சொல்லியது

[illegible] விரிபொருளை யாவரு [illegible] முறைவினகளி
[illegible] விதுவெனச் சைவப்பர காசன [illegible] செய்தார்
[illegible] லொடுவட [illegible] செய்யுள் [illegible]
[illegible] லியற்றிய சீர்வேலிச சங்கர பணிதரே.

சைவ உதயபானுபத்திரிகாதிபராகிய

ஊரெழு ா-ா-ா-ஸ்ரீ.

சு. சரவணமுத்துப்பிள்ளை

சொல்லியது

[illegible] புகழ்சைவசி [illegible] பாலிலைகடலகடைந்து
[illegible] சைவப்பர காசன [illegible]
[illegible] சைவ [illegible] ளிர்ானை
[illegible] வறிவுடைச [illegible] பணிதர [illegible] மாதவனே.

கோப்பாய ம-ா-ா-ஸ்ரீ. வித்துவான்.

சுப்பாபதிப்பிள்ளை

சொல்லியது

[illegible] யிறப்பராத [illegible] ளாகசுருகி [illegible]
[illegible] சொறசொ [illegible] வி [illegible]-சொற
சைவப்பர காசனநூல சாறறுபுகழ்ச [illegible]
சைவப்பர காசபணிதன.

அவற்றுள், அவ்வியாத்தியாவது, இலக்கணம் இலக்கியத்தின் ஏகதேசத்தில் இருத்தலின்மை; எங்ஙனம்.—ஆவிற்குக் கபிலநிறமுடைமை.

அதிவியாத்தியாவது, இலக்கணம் இலக்கியமல்லாததன்கண்ணும் இருத்தல்; எங்ஙனம்,—ஆவிற்குக் கோடுடைமை.

அசம்பவமாவது, இலக்கணம் இலக்கியமுழுதினும் இருத்லின்மை; எங்ஙனம்,—ஆவிற்கு ஒற்றைக்குளம் புடைமை

இம்மூக்குற்றங்களும் நீங்கிய இயல்பே இலக்கணம்; இலக்கியமுழுதிலும் வியாபித்து, இலக்கியமல்லாததின் வியாபியாத தன்மையே இலக்கணம் என்பதுமுடிபு.

இவ்விலக்கணம் சுவரூபமும், தடஸ்தமும், அதத்துவியாவிருத்தமும என்னும் மூவகையுடைத்து.

[சுவரூபம் - தன்னியல்பு. தடஸ்தம்-அயலிடத்திருப்பது. அதத்துவியாவிருத்தம்-அதுவல்லாததிலிருந்து திரும்பியது.]

அவற்றுள், சுவரூபமாவது, இலக்கியப்பொருளிலே இயற்கையாக இருக்கும் இலக்கணம்; எங்ஙனம்,—ஆன்மாவிற்கு அறிவுதொழிலுடைமை.

தடஸ்தமாவது, பிறிதோர் பொருளின் சார்புபற்றி இலக்கியப்பொருளில் இருக்கும் இலக்கணம்; எங்ஙனம்,—ஆன்மாவிற்குச் சிற்றறிவுடைமை, அல்லது சரீரப் பிரேரகத்தன்மை.

அதத்துவியாவிருத்தமாவது, மற்றைப் பொருளிலிருந்து நீங்கி இலக்கியத்திலிருக்கும் இலக்கணம்; எங்ங

ளம்,—ஆன்மாவிற்குச் சரீரமுதலியவற்றின் வேறுந் தன்மை. அதத்துவியாவிருத்தம் தடஸ்தத்துள் அடங்குதலுந் தகும்.

இங்ஙனங்கூறிய இலக்கணத்திற்குப் பயன் பொருள்களை வேறுபடுத்தி வழங்குதலாம்.

இரண்டாது.

பிரமாணம்.

பிரமாண இயல்பு

பிரமாணமாவது, பிரமிதியினது கருவியாம். பிரமிதியாவது, பிரமாதா பிரமேயத்தை ஐயந்திரிபின்றி உள்ளபடி யறிதல். அதுவே மெய்யறிவு.

[பிரமாதா- அளப்பவன். பிரமாணம் - அளவைக்கருவி. பிரமிதி-அளத்தல்; பிரமையுமது. பிரமேயம்-அளக்கப்படுவது.]

ஐயமாவது, ஒருபொருளை மாறுபட்ட பலபொருளாக உணர்தல்; எங்ஙனம்,—இவ்வுருக் குற்றியோ புருடனோ என்றல்.

திரிபாவது, ஒருபொருளை மற்றொரு பொருளாக உணர்தல்; எங்ஙனம்;—இப்பிளை வெள்ளியென்றல். ஐயமுந் திரிபும் பொய்யறிவாம். மெய்யறிவின் வாசனையாற்றோன்று முணர்வு மெய்ந்நினைவு; பொய்யறிவின் வாசனையாற்றோன்று முணர்வு பொய்ந்நினைவு.

உள்ளபடியறிதலாவது, அறியப்படும் பொருளில் இருந்த பிரகாரமுடையதாக அறிதல்:

இனிக் கருவியாவது, காரணங்களுட் சிறந்ததாகிய காரணம்

[கருவி-கரணம்.]

காரணமாவது, பிறிதொன்றிற்கு ஆதலின்றி நியதமாய்க் காரியத்துக்கு முன்னிற்றலுடையது.

காரியமாவது, முன்னில்லாததாகிப் பின்னுள்ளதாவது.

அந்தக்காரணம் முதலும், துணையும், நிமித்தமும் என மூவகைத்து.

[முதல் - உபாதானம், சமவாயி. துணை-சககாரி.]

காரியத்தோடு சமவாயமுடைய காரணம முதற்காரணம்

[சமவாயம்-ஒற்றுமை, இயைபு.]

காரியந் தோன்றுதற்கு உபகாரகமாய் நிற்கு காரணந் துணைக்காரணம.

[உபகாரகம்-உதவுவது, உதவி.]

தன்வசமாய் நின்று, காரணங்களைப் பிரேரித்துக், காரியத்தைத் தோன்றுவிக்குங் காரணம் நிமித்தகாரணம்.

[வசம்-தலைமை, இச்சை. பிரேரித்தல் ஏவுதல், செலுத்தல்.]

எங்ஙனம்,—குடமாகிய காரியத்துக்கு மண் முதற்காரணம; திரிகை முதலியன துணைககாரணம; குயவன் நிமித்தகாரணம்.

இம்மூன்று காரணங்களுள் எவ்வாற்றானுஞ் சிறந்ததாவதே கருவியாம்.

கருவியானது, அவாந்தரவியாபாரமும பலனும் உடையது, எங்ஙனம்,—தறித்தற்கருவியாகிய குடாரத்துக்கு மரத்தோடுளதாய கூட்டமே அவாந்தரவியாபாரம்; தறித்தலே பலன்.

[அவாந்தர வியாபாரம்-இடைத்தொழில்]

பிரமாதாவினது சிற்சத்தியே பிரமிதித்தொழிலினது கருவியாதலின், அதுவே பிரமாணம்.

[சிற்சத்தி-அறிவாற்றல்.]

சிற்சத்தியாகிய பிரமாணத்துக்கும், பிரமேயப் பொருட்கு முளதாகிய ஞாபக ஞாப்பியத்தன்மைச்சம் பந்தமே அவாந்தர வியாபாரம்: அச்சம்பந்தத்தாற் றோன்றும் பிரமேயவறிவே பிரமிதியாம்: அதுவே பலன்.

[ஞாபகம்-அறிவிப்பது. ஞாப்பியம்- அறிவிக்கப்படுவது.]

தடையில்லாத சிற்சத்தியானது, பிறபொருளுபகாரத்தை வேண்டாது தன்னியற்கையால் விளங்கிப், பிரமேயங்களெல்லாவற்றையும் நிருவிகற்பமாக அளந்தறியும்; அவ்வறிவு அனுபூதியெனப்படும்.

[அனுபூதி-காட்சி, எதிருற்றுணர்தல்.]

அவ்வனுபூதி சுவானுபூதியும், பரானுபூதியும் என இரண்டாம.

[சுவானுபூதி - தற்காட்சி. பரானுபூதி-பிறகாட்சி.]

பிரமாணவிபாகம்.

பெத்தான்மாவாகிய பிரமாதாவினது சிற்சத்தி பாசத்தாற்றடுக்கப்பட்டிருத்தலாற், பிறபொருளின்உபகாரத்தை வேண்டித், தத்துவங்களால விளங்கி, இந்திரியம், இலிங்கம், சத்தம் என்னும் மூன்றினோடு கூடுதலால், முறையே பிரத்தியக்ஷம், அனுமானம் ஆகமம் என்னும்பெயருடைய மூவகைப் பிரமாணமாகித் தன்னெலலைக்கியன்ற பிரமேயங்களை நிருவிகற்ப சவிகற்பமாக அளந்தறியும்.

அச்சிற்சத்திக்கு உபகாரமாகிய இந்திரியம், இலிங்கம், சத்தம் என்பவையும் உபசாரத்தால் முறையே பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் என்னும்பெயர் பெறும்.

[ஆகமப்பிரமாணம், சத்தப்பிரமாணம் என்ப ன பரியாயமாம். இந்திரியம்-பொறி. இலிங் கம்-குறி. சத்தம்-சொல், உரை. பிரத்திய க்ஷம்-காண்டல். அனுமானம்-கருதல். ஆக மம்-உரை, வரவு. உபசாரம்-சார்ச்சிவழக் கம்.]

இப்பிரமாணங்களாற் றோன்றும் பிரமிதிகள் முறை யே பிரத்தியக்ஷம், அனுமிதி, சாத்தம் எனப்பெயர் பெறும்.

[பிரத்தியக்ஷம்-காட்சியுணர்வு. அனுமிதி-கரு த்துணர்வு. சாத்தம்-உரையுணர்வு.]

இம்மூன்றும் முறையே அனுபூதி, யுத்தி, சுருதி எனவும்படும்.

[இவற்றிற்குக் காட்சி, கருத்து, கேள்வி என் பன பிரதிபதம்.]

பிரத்தியக்ஷம்.

இனிப் பிரமாணமூன்றனுட், பிரத்தியக்ஷப்பிரமா ணமாவது, பிரத்தியக்ஷப் பிரமிதியின் கருவியாம்; சிற்சத்தியோடு கூடிய இந்திரியமே பிரத்தியக்ஷப்பிர மிதியின் கருவியாதலிற் பிரத்தியக்ஷப் பிரமாண மெ னப்படும். பிரத்தியக்ஷப் பிரமிதியாவது, இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் அறிவு. ஈண்டு இந்தி ரியங் கருவி; இந்திரியவிடயசம்பந்தம் வியாபாரம்; பிரத்தியக்ஷப்பிரமிதி பலன்..

இந்திரியங்களாவன,—மனம், செவி, தோல், கண், மூக்கு, நாக்கு, என்னும் ஆறுமாம். விடயங்களாவன திரவியங்களும், அவற்றின் குணங்களும், கருமங்க ளும், அவற்றின் சாதியும், விசேடமும், சமவாயமும், அவற்றினின்மையுமாம்.

இந்திரியம தனக்கு யோக்கியமான விடயத்தையே கவரும.

[யோக்கியம்-தக்கது, ஏற்றது.]

அகவிந்திரியமாகிய மனத்துக்கு உணர்வு, விருப்பு, முயற்சி, இன்பம், துன்பம, வெறுப்பு என்னும் அகப்பொருள்கள் நேரே யோக்கியமாம.

ஏனைப்புறப்பொருள்கள் அந்த அந்த இந்திரியத்துவாரத்தால் யோக்கியமாம.

புறவிந்திரியங்கட கண்ணுந் தோலுமல்லாதனவற்றிற்குத் திரவியம யோக்கியமாகா.

ஒளித்துணையோடு கூடிய கண்ணுக்குப் பருமையுந் தோற்றிய உருவமுமுடைய திரவியங்களும, யோக்கியத்திரவியங்களிலுள்ளனவாகிய உருவம், எண், அளவு, வேற்றுமை, சம்யோகம, விபாகம், முன்மை, பின்மை, சிநேகம, நெகிழ்ச்சி, வேகம என்னுங் குணங்களும, யோக்கியத்திரவியத்தினியைந்த கருமமும, யோககியப் பொருள்களையடைந்த திரவியத்தனமை, உருவத்தன்மை முதலிய சாதியும், யோக்கியப்பொருள்களின் சமவாயமும யோக்கியமாம். பரமாணுப் பருமையுடையதன்று; ஆன்மா முதலியன் உருவமுடையன அல்ல; பிசாசு சரீரமுதலியன தோற்றிய உருவமுடையன அல்ல; ஆதலின் அவை கண்ணுக்கு யோக்கியமல்ல.

தோலுக்குப் பருமையுந் தோற்றிய பரிசமுமுடைய திரவியங்களும், உருவத்தின்வேறாய்க் கண்ணுக்கு யோக்கியமாகி யோக்கியத் திரவியத்திலிருக்குங் குணங்களும் யோக்கியத்திரவியத்திலுள்ளபரிசமும், யோக்கியத்திரவியத்தின் கருமமும், யோக்கியப்பொருளின் சாதியுஞ், சமவாயமும்யோக்கியமாம்.பரமாணுப்பரியதன்று; ஒளி தோற்றிய பரிசமுடையதன்று: வாய

வினளவு கண்ணுக்கு யோக்கியமன்று; ஒளியினளவு யோக்கியப்பொருளின் இருப்பதன்று; ஆதலின் அவையோக்கியமல்ல.

மூக்குக்குப் பரியதன்கணுள்ள தோற்றியகந்தமும், அதன் சாதியும், அவ்விரண்டின் சமவாயமும் யோக்கியமாம். பரமாணுவின் கந்தம் பரியதிலுள்ளதன்று; வச்சிரமணிமுதலியவற்றின் கந்தம் தோற்றியதன்று; ஆதலின் அவை யோக்கியமல்ல.

நாக்குக்குப பரியுதிலுள்ள தோற்றிய இரசமும், அதன்சாதியும், அவ்விரண்டின் சமவாயமும் யோகக்கியமாம. பரமாணுரசம் பரியதிலுள்ளதன்று; வச்சிரமணிமுதலியவற்றின்இரசம் தோற்றியதன்று; ஆதலின் அவை யோக்கியமல்ல.

செவிக்குச் சந்தமும், அதன்சாதியும், அவ்விரண்டின் சமவாயமும யோக்கியம.

இந்திரியவிடயங்களின் சம்பந்தம் சம்யோகமும், சமயுத்த சமவாயமும், சம்யுத்த சமவேத சமவாயமும், விசேடண விசேடியத் தன்மையும் எனநான்காம்.

[இவற்றிற்கு முறையே புணர்ச்சி, புணர்ந்ததினியைபு, பணர்ந்ததினியைந்ததினியையு, அடைமுதலாதல என்பன பிரதிபதம்.]

திரவியங்கள் சம்யோகததானும், குணமுங், கருமமுந், திரவியத்தின் சாதியுஞ் சம்யுத்தசமவாயத்தானும், குணகருமங்களின் சாதி சம்யுத்த சமவேத சமவாயத்தானும், சமவாயமும் இன்மையும் விசேடண விசேடியத்தன்மைச் சம்பந்தத்தானுங் கவரப்படும்.

எங்ஙனம்;—கண்ணுற் குடத்தைக் காணுங்காற் சம்யோகசம்பந்தம்; குடத்தினது கருமை முதலிய உருவத்தைக் காணுங்காற், சம்யுத்த சமவாயம்;

கணணோடு சமயுததமான குடதகில உருவஞ சமவாயிததலால குடததினுருவததினுளள உருவததனமையாகிய சாதியைககாணுங்கால, சமயுததச்மவேதமவாயம, கணணோடு சமயுததமான குடததில உருவஞ்ச மவேதம, உருவததில உருவததனமை சமவாயிததலால நூலகளில் ஆடைச சமவாயததைக காணுங்கால, விசேடண விசேடியததனமைச சமபநதம, கணணோடு சமயுததமான நூல விசேடணம, நூலில ஆடைசசமவாயம விசேடியம ஆதலால பூமியிற குடமினைமையைககாணுங்காலும, அதுவே சமபநதமாம

இநதிரிய விடய சமபநததாறறோன்றும அறிவாகிய பிரததியக்ஷப பிரமிதி நிருவிகறபமுஞ, சவிகறபமுமென இருவிதமாம

[நிருவிகறபம-விகறபமிலலாதது சவிகறபம விகறபமுடையது விகறபம - வேறுபாடு, பேதம]

நிருவிகறபப பிரமிதியாவது, விசேடணததோடு கூடுதலின றிப, பொருணமை மாததிரநதிறறோயாது, இஃதொனறு எனததோனறுமறிவு, சவிகறபபபிரமிதியாவது, நாம, சாதி, குண, கருமத,திரவியங்களாகிய விசேடணங்களோடு கூடி "இவன தேவதததன இவனபிராமணன, இவன கரியன, இவன ஓதுவான, இவன பொனனன" எனறிவவாறு தோன்றுமறிவு

[விசேடணம-வேறுபடுததுவது, அடை விசேடியம-வேறுபடுததபபடுவது, முதல]

இப்பிரததியக்ஷப் பிரமிதியின் கருவியாகிய இநதிரியமபுணரநத சிறசததியே, பிரததியக்ஷபபிரமாணம

இனிப் பிதத்தம, படலம, தூரம, இருள முதலியகுறறங்களோடு கூடிய இநதிரியம, பிரததிக்ஷப போலி எனப்படும.

அனுமானம்.

அனுமானப் பிரமாணமாவது, அனுமிதியின் கருவியாம: சிறசத்தியோடு கூடிய இலிங்கம அனுமிதியின் கருவி ஆதலின், அனுமானப் பிரமாணம எனப படும.

[இலிங்கம், குறி, சாதனம், ஏது என்பன பரியாயம். அனுமிதி-கருதலறிவு].

அனுமிதியாவது, இலிங்கத்தின் ப்ராமரிசததாறேனறும அறிவு. ஈண்டு இலிங்கவுணர்வு கருவி, பராமரிசமே வியாபாரம; அனுமிதி பலம.

[பராமரிசம ஆராய்சசி]

இலிங்கமாவது, வியாத்தி வலியால் மறைந்தபொருளை உணாத்துவது.

வியாப்பிய மாவதே இலிங்கமெனினுமொக்கும.

எங்ஙனம,—புகை தீககு இலிங்கம.

[வியாத்தி- வியாபிததல், செறிதல, உடனிகழ்ச்சி]

வியாத்தியாவது, சாதனத்துககுச சாத்தியததோடுளதாகிய இயற்கைச்சம்பந்தம.

வியாப்பிய வியாபகங்களினியற்கைச் சமபந்தமே வியாத்தி எனினுமொக்கும்

எங்ஙனம,—யானடுப்பகை ஆண்டுத்தீ எனப் புகைக்குத் தீயோடுள்ள சம்பந்தம.

[சாதனம்-முடிப்பது. சாத்தியம-முடிக்கப்படுவது. வியாப்பியம்- வியாபிக்கப்படுவது, குறைந்திருப்பது. வியாபகம- வியாபிப்பது, மிகுந்திருப்பது.]

புகை வியாப்பியம், தீ வியாபகம்.

இலிங்கத்தின் பராமரிச்மாவது, வியாப்பியமாகிய இலிங்கம பக்ஷத்தில் இருக்கின்றதென்று உணர்தல்:

எங்ஙனம,—தீயால வியாபிககப்படுவதாகிய புகை மலையிலே உண்டு என்னு முணாசசி அபபராமரிசமே வியாபாரம

[பக்ஷம-பக்கம, சா, சாததியஸதானம]

இலிங்கபராமரிசததாற றோன்றும அறிவு பக்ஷத திற சாததியம இருககினறது என்னு மறிவாம எங்ங னம,—மலையிறதீயுணடெனனுமறிவு அதுவே, ப மாகிய அனுமிதியாம அது சவிகற்பமே

இவவனுமானம சுவாததமும, பராததமும என இரணடாம

[சுவாததம தன்பொருட்டு பராததம பிறா பொருட்டு]

ஒருவன் தானே அடுககளை முதலியவற்றிற சிறந்த பிரததியக்ஷததாற புகைதீககளின் வியாததியைகக வாகது,மலையின அணமையிறசென்று, மலையிறதீயின் ஐயங்கொணடு, அமமலைமேற புகையைக கணடுழி "யாணடுபபுகை ஆணடுதது" எனனும வியாததியை நினைபபன், அதன்பின் மலை தீயால வியாபிககபபட்ட புகையுடையது என்னும உணர்வாகிய இலிங்கபராம ரிசந தோன்றும, அதுவே சுவாததானுமானம அத னால் இமமலை தீயுடைதது என்னுஞ சாததியசிததியு ணாவாகிய அனுமிதிதோனறும, அது சுவாததானு மிதி எனப்படும

தான் புகையாற றீயை அனுமிததுணாநது, பிற ரை உணாததுதறகுப் பிரயோகிககும அனுமானவாக யமே பராததானுமானம வாககியம இலிங்க பரா மரிசம அன்றாத்லின், வாককியம அனுமிதிককு நேரே கருவியன்றும ஆயினும, அனுமிதிককுக கருவியாகிய இலிங்கபராமரிசததைப்பயக்குஞ சாதத உணாவைப

பிறப்பிக்குஞ் சின்னமாதலின் அவ்வாக்கியம் உபசாரத்தால் அனுமானம் என்று சொல்லப்படும்.

அனுமானவாக்கியமானது பிரதிஞ்ஞை, ஏது உதாரணம் என்னும் மூன்று அங்கமுடையதாம்.

[பிரதிஞ்ஞை- மேற்கோள், சம்மதி. உதாகரணம்-எடுத்துக்காட்டு.]

அவற்றுட் பிரதிஞ்ஞையாவது, பக்கத்தைச் சாத்தியமுடையதாக உணர்த்துவது; ஏதுவாவது, மூன்றுமுருபேனும், ஐந்தாமுருபேனும் ஈறாக நின்று இலிங்கத்தை உணர்த்துவது. உதாகரணமாவது; வியாத்தியோடு கூடிய திருட்டாந்தத்தை உணர்த்துவது.

[திருட்டாந்தம்-காணப்பட்ட முடிபுடையது.]

அனுமானவாக்கியம். (க) மலை தீயுடைத்து., (உ) புகை யுடைமையால், (ங)யாது புகைபுடைத்து அ தீயுடைத்து அடுக்களைபோல என்பதாம். இதனுண் மூன்று அங்கமும் வந்தன; இதனால் உணர்த்தப்பட்ட இலிங்கத்தாற் பிறனுக்கு மலையிற்றீயுண்டு என்னு முணர்வு உண்டாம்; அதுபரார்த்தானுமிதிஎனப்படும்

சுவார்த்தானுமிதி பரார்த்தானுமிதி என்பவையிரண்டிற்குங் கருவியாகிய இலிங்க பராமரிசத்தோடுகூடியசிற்சத்தியே அனுமானப் பிரமாணம்.

இலிங்கத்தின் வியாத்தி அன்னுவய வியாத்தியும், வியதிரேக வியாத்தியும் என இரண்டு விதமாம்.

[அன்னுவயம்-உடன்பாடு, உண்மை. வியதிரேகம்-மறை, இன்மை, மீட்சி.]

அன்னுவயத்தால் ஆகும் வியாத்தியாவது, சாதன சாத்தியங்களின் உண்மையாலாகும் வியாத்தி; சாதனமுள்வழிச்சாத்தியம் உளதாதல் என்றபடி. அது,யாண்டுப்புகை ஆண்டுத்தீ எனவரும்.

[illegible] ஒருவியாதியாவது, சாதகிய [illegible] ஒருவியாதி, சாத [illegible] இருமுகல எனறபடி, அ[illegible] [illegible] புகையுமிலலை எனவறாா

[illegible] வியாதியிலல [illegible] வியாபபியம, அ[illegible] [illegible] வியதிரேக வியாதியில வியாபகமாப அனனவய வியாதியிலலாது வியாபகம, அதனினை [illegible] வியதிரேக வியாதியில வியாபபியமாம, [illegible] புகை வியாப பபியம, தீ விடாத [illegible] தீயினமை இனறகவும புகையினமை இருநதாலாற புகையினை வியாபகம, தீயினை, வியாபபியம.

வியாதகி [illegible] சபக்ஷம, விபக்ஷம என மூனறு

[சபக்ஷம் [illegible] விபக்ஷம் விஷயம்]

பகதாரதது, காதகினாலே துணியபபடுஞ் சாதகிய [illegible] சபக்ஷம, [illegible] நடதியினாலே துணியபபட [illegible] சாதகியதது [illegible] விபக்ஷம துணியபபடட சாதகிய [illegible] எனபனவ,—புகை யுளடை [illegible] எதயில [illegible] பபசதம, அடுககளை [illegible] விபசதம

இலிஙகமாகது, கூடபபடபிரிந்து நிறகின்ற வியதியால, அனனுவய வியதிரேகி, கேவலாநுவயி, கேவல வியதிரேகி என மூவனகபபடும

அவறறுள, அனனுவய வியதிரேகி அனனுவயதானும வியதிரேகததானும வியாதியுடையது எனகனம,—தீசாதகியமாகுமிடசதுப புகையுடைமயாகிய இலிஙகம அனனுவய வியதிரேகி, யானடுபபு

[illegible] அநுமானம்போல [illegible] அவனுடைய [illegible] ஏது, [illegible] கூறுபடுபுலகயுடைமை [illegible] வியதிரேக வியாதியுடையது [illegible]

[illegible] (உ) (ச) [illegible] அநுதியா (உ) [illegible] (ர) [illegible] செயப்படாதது அது [illegible] (ங) [illegible] அநுதியாமல் [illegible] செயப்படாதது [illegible] கடவுளைபோல, [illegible] [illegible] செயப்படாதது [illegible] [illegible] [illegible] [illegible]

[illegible] [illegible] [illegible] [

லன் முதலியனவுடைமையால் (௩) யாது ஆன்மாவுடையதன்று அது பிராணன்முதலியனவுடையதும் அன்று சகடம்போல.

ஈண்டு ஆன்மாவுடைமை சாத்தியம்; பிராணன்முதலியனவுடைமை இலிங்கம்; அதுவுங் கேவல வியதிரேகி; அன்னுவய வியாத்தியின்மையின், அங்ஙனமன்றோ,—யாது பிராணன் முதலியவுடையது அது ஆன்மாவுடையது இதுபோல என அன்னுவய திருட்டாந்தமில்லை, சீவிக்கின்ற சரீரமெல்லாம் பக்ஷமேயாகலின்.

அன்னுவய வியதிரேகியேதுப் பக்ஷத்தில் இருக்கை, சபக்ஷத்தில் இருக்கை, விபக்ஷத்தின் நீக்கம் என்னும் மூன்று ரூபங்களோடு கூடியதாம். எங்ஙனம்,—புகையுடைமையாகியஏதுப் பக்ஷமாகிய மலையில் இருத்தலும், சபக்ஷமாகிய அடுக்களையில் இருத்தலும், விபக்ஷமாகி". மடுவில் இல்லாது நீங்குதலும் உடைத்தே.

[ரூபம்-தன்மை-விதம்.]

கேவலான்னுவயியேதுப் பக்ஷத்திலிருக்கை, சபக்ஷத்திலிருக்கை என்னும் இரண்டு ரூபமுடையதாம். அதற்கு விபக்ஷமின்மையின் விபக்ஷத்தின் நீக்கம் இல்லை.

கேவலவ்யதிரேகியேதுப பக்ஷத்தினிருக்கை, விபக்ஷத்தின் நீக்கம் என்னும் இரண்டு ரூபமுடையதாம் அதற்குச் சபக்ஷமின்மையிற் சபக்ஷத்தினிருக்கை இல்லை.

அனுமானப்போலி.

இனிப் பக்ஷத்தில் இருக்கையின்மை, சபக்ஷத்தில் இருக்கையின்மை விபக்ஷத்தின் நீக்கமின்மை என்னுங் குற்றங்களோடு கூடிய அனுமானம் அனுமானபபோலி எனப்படும்

அனுமானப் போலி ஏதுப்போலி ஏத்துவாபாசம் என்பன பரியாயம்.

ஏதுப்போலியாவது, ஏதுலக்ஷணமின்றி ஏதுப்போலத்தோன்றுவது: அது அசித்தம், விருத்தம், அனைகாந்தம் என மூன்றும்.

[அசித்தம்-முடியாதது முடிக்கப்படாதது-விருத்தம்-முரணியது, மாறானது. அனைகாந்தம்-ஒருதலையில்லது, பிறழ்வுடையது,]

அவற்றுள், அசித்தமாவது, பக்ஷத்தில் இருக்கையில்லாத ஏது.

ஈண்டு வியாப்தியோடுகூடிப் பக்ஷத்திலிருப்பதே முடிந்தது; அஃதல்லாததே முடியாதது.

அசித்தம்.

அசித்தமானது, பக்ஷாசித்தம், சுவரூபாசித்தம், வியாபபியத்துவாசித்தம் என மூன்றும்.

பக்ஷாசித்தம் பக்ஷமின்மையான் முடியாதது: எங்ஙனம்,—ஆகாசத்தாமரை மணமுடைத்து, தாமரையாதலால், குளத்தாமரை போல என்பது.

ஈண்டு மணமுடைமையாகிய சாத்தியத்துக்கு ஆகாசத்தாமரை பக்ஷம்; அதுவே இல்லை.

[பக்ஷம், ஆச்சிரயம், சார்பு என்பன பரியாயம்.]

சுவரூபாசித்தந் தன்னியல்பின்மையான் முடியாதது; பக்ஷத்திலே தன்னியல்பால் இருத்தலில்லாதது என்றபடி: எங்ஙனம்,—சரீரம் நித்தியம், பிரிக்கப்படாமையால், உயிர்போல என்பது.

ஈண்டுப் பிரிக்கப்படாமை ஏது; அதுவும் சரீரத்தில் இல்லை: சரீரம் பிரிக்கப்படுவதே ஆதலின்.

வியாப்பியத்துவாசித்தம் வியாபிக்கப்படுந்தன்மையின்மையான் முடியாதது, வியாத்தியில்லாதது என்றாம். அது இருவகைப்படும்.

அவற்றுள், முதலாவது சாதியத்தோடு உண்மை சம்பந்தம் இல்லாதது. எங்ஙனம், யாது உள்ளது அது கணிகம் எங்ஙனம் முகிற்படலம், அங்ஙனஞ் சரீரம் முதலியதும் உள்ளது என்றாம், இது பௌத்த அனுமானவாக்கியம் இதன் திரிபுவாக்கியம்:—சரீரம் முதலியது கணிகம், உளதாதலால், யாது உளது அது கணிகம், எங்ஙனம் முகிற்படலம் என்பதாம்.

ஈண்டுச் சரீரம் முதலியது பக்கம், கணிகத்தன்மை சாத்தியம், உளதாதல் ஏது: இவ்வேதுக கணிகத்தன்மையோடு சம்பந்தித்தலைக் கவரும் ரமாணமே இல்லை.

[கணிகம்-கணமாத்திரத்தில் இருப்பது
படலம்-கூட்டம்.]

இனி இரண்டாவது உபாதியோடு கூடிய சாதியத்தோடு சம்பந்தமுடைய ஏது.

[உபாதி-செயற்கை, பயப்பது]

தன்குணத்தைத் தன்னிற்போலத் தன்னை அணுகிய பொருளிடத்துச் சாதிப்பதே உபாதி, சாத்தியத்தின் சம வியாத்தியுடையதாய்ச் சாதனத்தில் வியாபியாததே உபாதி என்பதாம். அஃது எங்ஙனம்,—மலை புகையுடையது, தீயுடைமையால், அடுக்களை போல என்பது.

ஈண்டுத் தீயுடைமை சாதனம், புகையுடைமை சாத்தியம்; ஈரவிறகுத் தீக்கூட்டம் உபாதி: அது புகையோடு தன்னிடத்திலுள்ள காரியகாரண சம்

பர்தமாகிய வியாத்தியைத் தன்னிடத்திறபோலத தன்னை அணுகியதாகிச் சாதனம என்று எண்ணப்பட்ட தீயிடத்திற் சார்த்துகின்றது: அதுதான், யாண்டுப் புகையுண்டு ஆண்டு ஈரவிறகுத்திக்கூட்டம் உண்டு, யாண்டு ஈரவிறகுத்திக்கூட்டம் உண்டு ஆண்டுப் புகை உண்டு எனச் சாத்தியத்திற் சம வியாபகமாயும், யாண்டுத் தீ உண்டு ஆண்டு ஈரவிறகுத் திக்கூட்டம இன்று, ஒழுகக் காய்ச்சிய இரும்பில் ஈரவிறகின்மையின் என ஏதுவில் வியாபகமாகாமலும் இருத்தலின், உபாதிலக்ஷணம் உடையதாம்; அதுவே புகையைப் பயப்பது, மற்றைத்தீ புகையைப் பயப்பதன்று.

அவ்வுபாதியோடு கூடிய சாத்தியம் புகையுடைமை, அச்சாத்தியத்தோடு சம்பந்தமுடைய ஏதுத்தீயுடைமை; அதுவே உபாதியோடு கூடிய வியாப்பியத்துவாசித்தம்.

இங்ஙனமே வேள்வியில் நிகழுங் கொலை அதன்மசாதனம், கொலைமையால், வேள்விப் புறத்துக கொலைபோல என்பதில், விலக்கப்பட்டமை உபாதி; அது, யாண்டு அதன்மசாதனத்தன்மை ஆண்டு விலக்கப்பட்டமை உண்டு, யாண்டு விலக்கப்பட்டமை ஆண்டு அதன்மசாதனத்தன்மை உண்டு எனச் சாத்திய சம வியாபகமாயும், யாண்டுக்கொலைமை ஆண்டு விலக்கப்பட்டமை இன்று, வேள்விக்கொலை, சத்துருக்கொலை, கர்வர்கொலை முதலிய கொலையின் விலக்கப்பட்டமை இன்மையின் எனச் சாதன அவ்வியாபகமாயுமிருத்தலின். ஆதலின் அதன்மசாதனத்தைப் பயப்பது கொலையன்று; விலக்கப்பட்டமையே.

விருத்தம்.

இனி விருத்தமாவது, சபக்ஷத்திலின்றிப் பக்ஷத்திலும், விபக்ஷத்திலும், இருக்கையுடைய ஏது; சாத்தி

யாதுக்கு விசேஷமாகிய சாதியாதை முடிக்கும் என்
னபதாம்

அஃது எங்ஙனம்,—சரீரம் நித்தியம், பிரிக்கப்படு
வதாதலால், உயிர்போல் என்பதனாடு நித்தியத்த
னமை சாதியிடம் பிரிக்கப்படுதலமை எது அது
சபக்ஷமாகிய உயிர்முதலிய நித்தியப்பொருளில் இரு
ந்தலினறி, பக்ஷமாகிய சரீரத்தும், விபக்ஷமாகிய
து—முதலிய அநித்தியப் பொருளிலும் இருப்ப
அதுவுர் நித்தியத்தனமைக்கு விபரீதமாகிய அநித்தி
யத்தனமையைச் சாதிப்பது, யாதுபிரிக்கப்படும் அ
ஃது அநித்தியமே ஆதலினை இதுவே விருத்தம்

இங்ஙனமே ஆனமாத்தோறமுடையன, அறிவி
லியாதலால் குடம்போல் என்பதில் அறிவிலியாத
லாகிய ஏதுத் தோறமுடைமைக்கு விபரீதமாகிய
தோறமின்மையைச் சாதிக்கின்றது உலகம் முத
ற்காரணமில்லாதது, காரியமாதலின் நிறைவன்
போல் என்பதாம், காரியமாதல் என்றும் ஏது முத
ற்காரணமினமைக்கு விபரீதமாகிய முற்காரண மு
டைமையைச் சாதிக்கின்றது

அனைகாந்தம்

இனி அநைகாந்தமாவது வியபிசாரமுடையது
[வியபிசாரம்—பிறழ்வு, நியமமின்மை]

விபக்ஷத்தின் நீங்கிய பக்ஷ சபக்ஷங்களின் இருப்பு
லாகிய நியமம் இல்லாத ஏது அநைகாந்தம் என்பது
அதுவொதுவுஞ், சிறப்பும் என இருவகைத்து

அவற்றுள் பொதுவநைகாந்தமாவது பக்ஷ சபக்ஷ
விபக்ஷங்களின் இருக்கும் ஏது, எங்ஙனம்,—சரீரம்
நித்தியம், பொருணமையால், உயிர்போல் என்பது
ணடுப பொருணமையாகிய ஏதுச் சரீரத்தினும், நி

தியப்பொருளினும், அநித்தியப்பொருளினும் இருக்கின்றது.

சிறப்பலைகாந்தஞ் சபக்ஷ விபக்ஷங்களில் இன்விபக்ஷமாத்திரத்தில் இருக்கும் ஏது. எங்ஙனம்,—தீ நித்தியம், சுடுடைமையால், உயிர்போல என்பது: ஈண்டுச் சுடுடைமை நித்தியப்பொருளினும், அநித்தியப்பொருளினும் இன்றித் தீமாத்திரத்தில் இருக்கின்றது.

சற்பிரதிபக்ஷம்.

இனி இம்மூன்றோடு சற்பிரதிபக்ஷம், பாதிதம் என்னும் இரண்டுங் கூட்டி, ஏதுப்போலி ஐந்து என்பாருமுமுளர்.

[சற்பிரதிபக்ஷம்-உள்ளவிரோதியை உடையது.
பாதிதம்-தடுக்கப்பட்டது.]

அவற்றுட் சற்பிரதிபக்ஷமாவது, சாத்தியத்துக்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்குஞ் சாமர்த்தியமாகிய வேறொரு ஏதுவையுடைய ஏது.

[சாமர்த்தியம்-ஒத்தவலியுடையது.]

எங்ஙனம்,—மிருகசரீரம் உயிரில்லது, பொருளாமையால், கடம்போல: மிருகசரீரம் உயிருடையது, இயங்குதலால், மனுட்சரீரம்போல என்பதாம்.

ஈண்டுப் பேசாமையேது ஊமை முதலியனவற்றினும், இயங்குதலேதுச் சகடம் முதலியவற்றினுஞ் சென்று பிறழுதலால், அவை சாமர்த்தியமாகும்.

பாதிதம்.

பாதிதமாவது, சாத்தியத்துக்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்கும் பிரபலமாகிய வேறொரேதுவாலே தடுக்கப்பட்ட ஏது: எங்ஙனம், தீ குடிலல்லது, பொருண்மையால், நீர்போல என்பதாம்.

[illegible]

[illegible]

[illegible]

பதமாவது, ஆத்தனது வாக்கியம்.

[ஆத்தன்-உரியோன், நம்பப்படுவோன், உண்மை பொருளைக் கூறுவோன்.]

வாக்கியமாவது, பதங்களின் சமூகம். பதம் வர்ணகாரியம்; வர்ணம் நாதகாரியம்; நாதம் சுத்தமாயாகாரியம்.

[சமூகம்-கூட்டம்.]

பதமாவது, ஆற்றலாற் பொருளை உணர்த்துகின்ற எழுத்தொலி. எங்ஙனம்,—ஆ, குதிரை முதலியன.

ஆற்றலாவது, வாசகமாகிய சத்தத்துக்கு வாச்சியமாகிய பொருளோடு உளதாய கற்பித சம்பந்தம்; எங்ஙனம்,—ஆ என்னுஞ் சத்தத்துக்கு ஆத்தன்மையுடைய பிண்டமாகிய பொருளோடு சம்பந்தம்.

[ஆற்றல்-சத்தி. வாசகம்-சொல்வது. வாச்சியம்-சொல்லப்படுவது. கற்பிதம்-ஆக்கப்பட்டது, கற்பிக்கப்பட்டது.]

அவ்வாற்றல், இன்ன சத்தத்தால் இன்னபொருள் அறியப்படுவது என்னுஞ் சங்கேதயிதாவின் சங்கேதத்தால் ஆகியது; சங்கேதமே ஆற்றல் என்பதும் ஒருபக்கம்.

[சங்கேதயிதா-சங்கேதஞ் செய்பவன். சங்கேதம்-நியமம், உடன்பாடு, குறி.]

பத ஆற்றலானது, வழக்கம், உபதேசம், உபபர்ணம், கோஷம், வியாகரணம். விவரணம், சந்நிதானம், வாக்கிய சேஷம் என்பவற்றாற் கிரகிக்கப்படும்.

௧. வழக்கு,—ஒருவன் கூறிய வாக்கியத்தைக் கேட்டு மற்றொருவன் வழங்குஞ் செய்கை: எங்ஙனம்,—ஏவும் முதியோனாற் கூறப்பட்ட "குடத்தைக்

[illegible]

[illegible]

[illegible]

௬. விவரணம்,—வெளிப்படுத்துவது; அப்பிரசித்த மாகிய பதத்தைச் சார்ந்து விளக்குகின்ற பிரசித்தபத மாகிய பரியாயபதமும் வாக்கியமும்: எங்ஙனம், "பிகம் என்பது குயில்: யாறு என்பது மலையிற்றோன்றி நிலவழியாற் பாய்ந்து, கடலிற் புகும் நீர்ப்பெருக்கு." என்பன. இவற்றுள் முன்னது பிரசிபதம், பின்னது நிருத்தி.

[பிரசித்தம்-பயிலப்பட்டது, வழங்கப்பட்டது.]

எ. சந்நிதானம்,—அண்மை; ஒருபதத்தை உரிமையாற் பொருள்குறிப்பிக்கின்ற பிறபதங்கள் அணுகுதல்: எங்ஙனம்,—"தேமாந்தளிரிற் பிகமிருந்து சிந்தை களிப்பக் கூவியதால்" என்புழிச் சார்பும், வினையுந் தமக்கு உரிமையுடைய குயிறபொருள் குறிப்பிக்கும் "மாப்புத்தது, மாவீழ்நொசி, யாவினமாத்தேரான்" என்புழி வினையுஞ், சார்பிடமும், இனமும் உரிமையால் ஐயமறுத்து விசேடப்பொருள் குறிப்பிக்கும்.

௭. வாக்கியசேஷம்,—வாக்கியக்குறை; ஒருவாக்கியத்தின் பதத்தை ஐயமறத் துணிதற்கு அனுகூலமாகிய குறைவாக்கியம்: எங்ஙனம்,— "அரியயிவிடத்தில் வந்தனனால், கண்டதேவருடனெழுந்தக் கண்ணனடியில் வணங்கினார்" என்புழி அரியதப் பொருளைப் பின்வாக்கியந் துணிவித்தது.

அண்ணுவயமேனும் சாற்பரியமேனும் பொருந்தாதவிடத்து, வாசகத்தோடு ஆற்றலுடைய வாச்சியபபொருட்குப் பிறபொருளோடு கொள்ளப்படுஞ் சம்பந்தங் குறிப்பு எனப்படும்.

[குறிப்பு-இலக்ஷணை.]

"யாற்றில் இடைச்சேரி" என்புழி, யாறு என்னும் வாசகத்தோடு ஆற்றலுடைய வாச்சியப் பொருளாகிய நீர் வெள்ளம் இடைச்சேரிக்கு ஆதாரமாகி அன்று

வயிதரல் பொருந்தாமையின், நீர்வெள்ளத்தோடு கரைகளுக்கு உளதாய சம்பந்தத்தாற் கரை என்னும் பொருளேகொளப்படும் இச்சம்பந்தமே குறிப்பு.

ஆறறவுங் குறிபபும் நிகழ்ச்சி என்னும் பொதுப்பெயராலவழாகப்படும்.

[நிகழ்ச்சி-விருத்தி.]

சொன்னிகழசசிக்குப் பொருள் இடமாம்; ஆதலின் ஆ எனனுஞ் சொல் ஆப்பொருளிலும், யாறு என்னுஞ்சொல் நீர்வெள்ளத்திலுங் கரையிலும் நிகழ்ச்சியுடையன.

அவா, தகுதி, அண்மை என்னும் மூன்றுமுடையா பதங்களின் சமூகமே வாகியம; ஏனையன அல்ல.

[அவா-ஆகாங்கை. தகுதி-யோக்கியதை.
அண்மை-சந்நிதி, ஆசக்தி.]

அவா ஒருபதந் தன்னோடு அன்னுவயித்துப் பொருண முடிதற்குரிய மற்றைப் பதத்தை வேண்டுதல்.

[அன்னுவயம்-புணர்ச்சி]

தகுதி பதபபொருள்கள் ஒன்றோடு ஒன்று பாதையினறிச் சமபந்தித்தல்.

[பாதை-பாதம், தடை.]

அணமை, அன்னுவயித்தறகு வேண்டப்படும் பதங்கள இடையீடின்றி அடுத்துநிற்றல், அண்மை பதங்கள தாமதமின்றி உச்சரிக்கப்படுதல் என்பதும் ஒரு பக்ஷம.

"ஆ குதிரை ஆடு யானை" என்பது, அவாவிலது; "தீயால் நனைக்க" என்பது, தகுதியிலது; "மலை உணணப்பட்டது தீயுடையது தேவ்தத்தனுல்" என்பது அணமையிலது: இவை வாக்கியமல்ல. "மலை தீயுடை

த்து, தேவதத்தனால் உண்ணப்பட்டது" எனமாறின் அண்மையுடைத்தாம்.

"ஆ நடக்கின்றது, ஆவைக்கொணர்க, யாற்றங்கரையில் ஐந்துகனிகள் உள" என்பன முதலியன அவாமுதலிய மூன்றுமுடைமையின் வாக்கியங்களாம்.

பதப்பொருளுணர்ச்சியாவது, ஆற்றலுணர்வு துணையாகப் பதத்தாலே தோன்றுவதாகிய பொருளுணர்ச்சி.

"ஆ" என்னும பதத்துக்கும் "நடக்கின்றது" என்னும் பதத்துக்கும அந்த அந்தப் பொருளோடு உளதாய சங்கேதவாற்றலை உணர்ந்துகொண்டானொருவனுக்கு: "ஆ நடக்கின்றது" என்னும் வாக்கியவுணர்ச்சி உண்டாகியபோது, அவ்வாக்கியசத்தத்தின் பதங்களின் சங்கேதவாற்றல் நினைவாற் பதப்பொருளுணர்ச்சி உண்டாக, அதனால்: "தாடி கோடு கால் வால் முதலிய ஆததன்மையுடைய பிண்டம் இவ்வாக்கிய நிகழுங்காலத்திற் கால்பெயர்த்திட்டு, முன்னிடமவிட்டு வேறிடங்கூடுதலும உடைத்து" என்னும் வாகியப்பொருளுணாசசி உண்டாம. இங்ஙனமே சத்தவுணாசசியால் வாகியப்பொருளுணர்ச்சி தோன்றும்.

வாகியத்தைக கூறுவோர் ஆததன், பிராந்தன், வஞ்சகன் என மூவகையராய் இருப்பா.

'[பிராநதன்-திரிபுடையவன். வஞ்சகன்-படிறன்.]

அவருள், ஆத்தனுவான், தன்கண மயக்கமின்மையிற் பொருள்களை உள்ளவாறு உணர்ந்து, காமவெகுளிகள் இன்மையின் அவற்றை உணர்ந்தவாறே கூறுவோன்: ராசுவரன் அவதியில்லாத முற்றறிவனாகி

ப பரமாத்தனுதலின், ஈசுவரீய வாக்கியம் முழுதும் பிரமாணம்.

[அவதி-எல்லை. ஈசுவரீயம்-ஈசுவரனது.]

இலௌகிக வாக்கியங்களுள், தமதவதி முற்றறிவராகிய ஆத்தரது வாக்கியமே பிரமாணம்.

[இலௌகிகம்-உலகத்தவரது.]

வாக்கியத்தின் பிரமாணத்தன்மை பொருட்டகுதியால் உணரப்படும்.

இங்ஙனமே வாக்கியப் பொருளுணர்ச்சிக்குக் கருவியாகிய சத்தவுணர்ச்சியோடு கூடிய சிற்சத்தியே ஆகமப்பிரமாணம் எனப்படும்.

இனித் தகுதியின்மையாகிய குற்றத்தோடு கூடிய வாக்கியம், ஆகமப்போலி எனப்படும். பிராந்தவாக்கியமும், வஞ்சகவாக்கியமுமே ஆகமப்போலிகளாம்.

பிராந்தன், மயக்கத்தாற் பொருள்களை விபாதமாக உணர்ந்து கூறுவோன்.

வஞ்சகன், அறிந்தபொருள்களைக் காம வெகுளிகளால் விபரீதமாகக் கூறுவோன்.

[விபரீதம்-மாறு.]

வழுநிலை, பொருளின்மை, மீண்டுவரல், வீணே விரிதன் முதலிய சொற்குற்றங்களானும், பொய்மை, ஐயம், திரிபு, விரோதம், குறை, மிகை, பயனின்மை முதலிய பொருட்குற்றங்களானும் போலிவாக்கியங்களின் அப்பிரமாணத்தன்மை உணரப்படும்.

இங்ஙனங்கூறிய பிரமாணத்திற்குப் பயன் பிரமேயங்களை உள்ளபடி அறிந்து கொள்ளுதலாம்.

இங்ஙனமே இலக்கணப் பிரமாணங்கள் உரைக்கப்பட்டன.

சாதாரண பீடிகை முற்றிற்று.

சிவமயம்.

சுருதி நிருபணம்.

சுருதி இலக்கணம்.

அநாதி சுத்தனும், வியாபகனும, நிததியனும், சுவதந்திரனும், நிரவதி சர்வஞ்ஞனும், சாவகர்த்தாவும, சர்வானுக்கிரக காரகனும், பரிபூரணனும், சாந்தனும, பக்ஷபாதமிலியும் ஆகிய ஈசுவரனே பரமாத்தன் எனப்படுவன்.

[சுவதந்திரன்-தனது தலைமையுடையவன். நிரவதி-எல்லை இல்லாத. சாவஞ்ஞன்-முற்றறிவன். சர்வ கர்த்தா-முற்றுஞ் செய்பவன். அனுக்கிரகம்-உபகாரம். காரகன்-செய்பவன். பரிபூரணன்-மிகு திருத்தியுடையவன். சாந்தன்-காம வெகுளி மயக்கங்கள் ஒழிந்தவன், தணிந்தவன். பக்ஷபாதம்-ஒரு பக்ஷத்தில் விழுதல். பரமம்-மிகமேலாகிய, உயர்ந்த.]

பரமாத்தனால் உபதேசிக்கப்பட்ட பாரமார்த்திக வாக்கிய சமூகமே ஆதிச்சுருதி எனப்படும். இதுவே சுருதிலக்ஷணம்.

[உபதேசித்தல்-அறிவுறுத்தல், உணர்த்தல். பாரமார்த்திகம்-பரமார்த்தமுடையது. பரமம்- மிகமேலாகியது. அர்த்தம்- பொருள், சாதனம், விடயம், பிரயோசனம்.]

உணர்தற்கு அரியனவாகிய பதி பசு பாசங்களே மேலாகிய பொருள்; உயர்ந்தபயனைத் தருவனவாகிய கிரியையும் ஞானமுமே மேலாகிய சாதனம்; இவைகளே மேலாகிய விடயம்; போக மோக்ஷங்களே மேலாகிய பிரயோசனம்; இவையெல்லாம் பரமார்த்தம் எனப்படும்.

ண்டு: "பரமாத்தனால் உபதேசிக்கப்பட்ட" என்பதனாற் பரனது உபதேசம் பெற்ற பராபராத்தராலும், அபராத்தராலுஞ் செய்யப்பட்ட பாமார்த்தமுடைய சுருதிநூல்களும்: "பாரமார்த்திக" என்பதனால் ஈசுவரனாலுஞ் சீவராலுஞ் செய்யப்பட்ட அவாந்தரார்த்தமும் இலௌகிகார்த்தமும் உடைய நிருத்தம், சிக்ஷை, வியாகரணம், சோதிடம், மிருதி, புராணம், வைத்தியம், சிற்பம், கணிதம், வார்த்தை முதலிய நூல்களுஞ் சுருதிகளாயினும் ஆதிச்சுருதியல்ல என விலக்கப்பட்டன.

இனி ஆத்தனின் வேறாகிய பிராந்தனாலும் வஞ்சகனாலுஞ் செய்யப்பட்ட நூல்கள் சுருதிகளே ஆகாமையின், அவை தூரத்திற்றள்ளப்படும்.

[பரன்-உயர்வுடையோன். பராபரன்-உயர்வுந் தாழ்வுமுடையோன், அபரன்-தாழ்வுடையோன்.]

"ஈசுவரனாற் செய்யப்பட்ட பரோக்ஷார்த்த அனுபவசாதனமே சுருதி; சீவர்களாற் செய்யப்பட்டதல்லாத வாக்கியமே சுருதி; ஆதிசாத்திரமே சுருதி; பிரத்தியக்ஷ அனுமானங்களால் உணரப்படாத புருஷார்த்த உபாயங்களைத் தகுதியாக உணர்த்தும் வாக்கியமே சுருதி" எனக் கூறப்படுஞ் சுருதியிலக்கணங்களும் பொருந்தும்.

[பரோக்ஷ அர்த்தம்-தேச கால வஸ்துத்தன்மைகளால் இந்திரியத்துக்குத் தூரமாகிய அர்த்தம். அனுபவம்-உணர்ச்சி. சாதனம்-கருவி. புருஷ அர்த்த உபாயம்-ஆன்மப் பிரயோசன சாதனம்.]

சுருதி, வேதம், ஆகமம், நிகமம், ஆம்நாயம் என்பனமுதலியன பரியாயங்களாம்.

இச்சத்தங்களின் வியுற்பத்தி கூறப்படுகின்றது.

சுருதி, பரமார்த்தங்களைக் கேட்டற்குக் கருவி; ஈசுவரனிலிருந்து கேட்கப்பட்டது எனினும் பொருந்தும். சுரு-கேட்டல், தி-கருவிப்பொருளுஞ் செயப்படு பொருளும் உணர்த்தும் விகுதி.

வேதம், பரமார்த்தங்களை அறிதற்குக் கருவி. வித்-அறிதல்; அது வேத் எனக் குணவெழுத்துப் பெற்று நின்றது; அ என்பது கருவிவிகுதி.

ஆகமம், பரமார்த்தங்களை முற்றாக உணர்தற்குக் கருவி; வருவித்தற் கருவி. ஆ-முற்றாக, அண்மையாக, பாரம்பரியமாக; கம்-போதல், வருதல், உணர்தல்; அ என்பது கருவி விகுதி.

நிகமம், நியதமாக உணர்தற்கருவி. நி-நியதமாக. கம்-போதல், உணர்தல். அ-விகுதி.

ஆமிநாயம், ஆதி குருவிற்றொடங்கிப் பாரம்பரியமாகப் பயிலப்படுவது; கற்கப்படுவது. ஆ-பாரம்பரியமாக. மிநா-பயிலல், கற்றல்; ய என்பது செயப்படுபொருள் விகுதி.

சுருதி விபாகம்.

சுருதியானது, கருமகாண்டம், ஞானகாண்டம் என்னும் இரண்டு பாகங்களை உடையதாம்.

[காண்டம்-வருக்கம், தொகுதி.]

அவற்றுட் கருமகாண்டமாவது, துக்கமொழிப்பனம், சுகம்விளைப்பனவும், ஞானம்பயப்பனவும் ஆகிய கிரியைகளைப் பயனும், கருவியும், செய்யும் பிரகாரமும் ஆகிய முக்கூறமைந்த பாவனையோடு நியமிக்கும் பாகம்.

ஞானகாண்டமாவது, பதி, பசு, பாசம், தத்துவ தாத்துவிக சிருட்டி, சங்காரம், முத்தியுபாய சாதனம் முதலியவற்றை இலக்கணப் பிரமாணங்களாலே நிரூபிக்கும் பாகம்.

இன்னும் அச்சுருதியானது, மந்திரம், பிராமணம் என இரண்டுபாகமாகப் பகுக்கப்படும்; இவையிரண்டுந் தோத்திரம், சாத்திரம் எனவும்படும்.

[மந்திரம்-நினைக்கப்படுவது, நினைவிப்பது, உபசரிக்கப்படுவது, உபசரிப்பது. மந்-மதித்தல். திர-விகுதி. பிராமணம்-பிரமசம்பந்தமுடையது. பிரமம் என்பது தத்துவ உணர்வும், ஒழுக்கமுமாம்.]

அவற்றுள், மந்திரங்களாவன, கடவுளை நோக்கி அழைத்தல், புகழுதல், வேண்டல், ஏவுதல், ஆராய்தல், வினவல், விடுத்தல், புலம்பல் முதலிய செயல்களைத் தனித்தனியே உடையனவாய், ஞானக் கிரியைகளை நினைவிப்பனவாய்ப், பத்தி சுத்தி சித்திகளைப் பயப்பனவாய் உள்ள வாசகங்களாம்.

பிராமணம் விதிவாதமும், அர்த்தவாதமும் என இரு பிரிவினதாம்.

[வாதம்-கூறுவது. அர்த்தம்-பிரயோசனம்.]

விதியானது, செய்யப்படாதனவற்றைச் செய்விப்பதாகிய கருமவிதியும், உணரப்படாதனவற்றை உணர்விப்பதாகிய ஞானவிதியும் என இருவகையினதாம். இவ்விருவகையும் ஏனைய எல்லாவற்றையுந் தம்பாற்படுத்து நிற்குந் தன்மையவாதலிற், சிறப்புடையன.

அர்த்தவாதமாவது, விதியை வழங்குவித்தற்பொருட்டு விதிப்பயனை உள்ளதனானும் இல்லதனானும் வ

நுணித்துக் கூறுவது; அது நியம விதி விடயத்தைப் புகழ்தலும், விலக்குவிதி விடயத்தைப் பழித்தலும், பிறர் செய்கை காட்டலும், பழைய நிகழ்ச்சி கூறலும் உடையதாகி, விதியின் சேடமாய் நிற்கும்.

இங்ஙனங் கூறப்பட்ட மந்திரவாதம், விதிவாதம, அர்த்தவாதம் என்னும் மூன்றும் விரவியதே சுருதி பாம்.

அதி கம்பீரமாகிய சுருதியின் பொருளை உணர்தற்கு உபகாரமாகிய நூல்கள், சுருதியின் அங்கம் எனப்படும்; அவை நிருத்தம், வியாகரணம், சிக்ஷை, சந்தசு, சோதிடம், கற்பம் என ஆறும்.

[கம்பீரம்-ஆழம்.]

நிருத்தத்திலே பதவிவரணமும், வியாகரணத்திற் பத இலக்கணமும், சிக்ஷையிலே பத உச்சாரண இலக்கணமும், சந்தசிற் செய்யுளிலக்கணமும், சோதிடத்திற் கால விசேட இலக்கணமும், கற்பத்திற் கிரியாப்பிரயோக இலக்கணமும் நிரூபிக்கப்படும்.

சுருதிப் பிரமாணம்.

இனிச் சுருதியின் உண்மைத்தன்மையைத் துணிதற்குச் சுருதி, சாத்திரம், உலோகப் பிரசித்தி என்னும மூன்றும் பிரமாணமாம்.

அவற்றுட் சுருதியானது, தனது சாமர்த்தியத்தினாலே தன்னுண்மைக்குப் பிரமாணமாம்.

[சாமர்த்தியம்-தகுதி, வலியை, இணக்கம்.]

சுருதியின் சாமர்த்தியம் சத்த சாமர்த்தியமும், அர்த்தசாமர்த்தியமும் என இருவகைப்படும்.

சுருதியின் சாமர்த்தியங்களாவன்:—

க. சுருதியின் சத்தங்களெல்லாங் குற்றமின்றிக் குணலக்ஷணமமைந்த வர்ணம், பதம், வாக்கியம் மு

தலிய அவயவ அவயவிகளாய் இணங்கிப், பொருளை ப் பொருந்த உணர்த்தற்கு அநுகூலமாகிய முறையு டையனவாய் நிற்றல்.

உ. சில விசேடசத்தங்கள் விதிபடி உச்சரிக்கப் பட்டுழி வியாதிநீக்கம், விடநீக்கம், பிசாசநீக்கம் முதலிய பிரத்தியக்ஷ சித்திகளைப்பயத்தல்.

௩. சிலசத்தங்கள் சுருதியின் ஆக்கியோன், பெ யர்,பகுப்பு, அளவு, விடயம், பயன், சுருதி உறபத் தியின் காலம்,இடம் பிரகாரம என்பவற்றை உ ணர்த்திநிற்றல்.

இவைமூன்றுஞ் சத்தசாமாத்தியங்கள

௪. சுருதியில் உணர்த்தப்பட்ட அர்த்தங்களெல் லாம் எல்லாக்கூறுகளிலும் வியாகாதம், புநருததத துவம முதலியு விரோதமின்றி இணங்கி, வேறு பி ரமாணங்களாலே தடுக்கப்படாமல், மெய்யாகிப், பதி மகிமை விளக்கற்கும், பசுப்பிரயோசன சித்தி விளை த்தற்கும் அநுகூலமாயிருத்தல்.

௫. சுருதியில் உணர்த்தப்பட்டனவாய்ச், சீவர்க ளுக்கு அநுபூதி யுத்திமாத்திரத்தாற் கிரகிக்கப்படாத னவாய் உள்ள பரோக்ஷமாகிய பரமார்த்தங்கள் யு த்தியோக்கியமாக உணரப்படுதல்.

௬. சுருதியில் உணர்த்தப்பட்ட சில விசேட பொருள்கள் விதிப்படி பிரயோகிக்கப்பட்டுழிக், குறி க்கப்பட்ட பிரத்தியக்ஷ சித்தியைப் புயத்தல்.

௭. சுருதியிற்கூறப்பட்ட இறந்ததும், எதிர்வதும நுண்ணியதும், மறைந்ததும், சேயதும ஆகிய இவ்வி நப்பட்ட அர்த்தங்கள் பொய்மையினறி உண்மையு டையனவாதல்.

இவை நான்கும் அர்த்தசாமர்ததியங்கள்.

சுருதியின் அங்கங்களின் சாமர்த்தியமுஞ் சுருதி சாமர்த்தியமேயாம்.

இச்சாமர்த்தியங்களுள், மூன்றுவது சத்தப்பிரமாணம்; ஏனைய ஆறும் அனுமானப்பிரமாணம்; அவற்றுள்ளும் முதலாவதும், நாலாவதும் சுருதிப் பொதுத்தன்மையையும், ஏனையன சுருதிச் சிறப்புத்தன்மையையும உணர்த்துவன; இரண்டாவதும், ஆறுவதும், ஏழாவதுங் காட்சியானும், ஏனையன உளையானும் உணர்தற்பாலன.

முதலாவதும், நாலாவதும், ஐந்தாவதும் அகண்டச்சுருதியில் இருப்பன; ஏனையன கண்டச்சுருதியில் இருப்பன.

இனிச் சாத்திரங்களாவன, சுருதியின் வேறுகிய நூல்களாம்: அவை அனுகூலசாத்திரமும், பிரதிகூல சாத்திரமும், உதாசீன சாத்திரமும் என மூவிதமாம்.

[அனுகூலம்-உறவானது. பிரதிகூலம்-பகையானது. உதாசீனம்-நொதுமலானது.]

அவற்றுண் முன்னைய இரண்டுமே பெரும்பான்மையாகச் சுருதிக்குப்பிரமாணமாம்.

அனுகூலசாத்திரமாவது; ஆத்தவாக்கியமாகி, ஐகிகார்த்தங்களையும் பரோக்ஷார்த்தங்களையுங் குற்றமற உணர்த்திச், சுருதியின் முதன்மையை விளங்கப் போதிக்கின்ற வழிநூலாம். இது சத்தப்பிரமாணம்.

ஐகிகம்-இம்மைக்குரியது: பரோக்ஷம்-பிரத்தியக்ஷமாகாதது.]

பிரதிகூலசாத்திரம், அநாத்த வாக்கியமாகி, ஐகிகார்த்தங்களையும் பரோக்ஷார்த்தங்களையுங் குற்றமுற உணர்த்தி, நியாயமின்றிச் சுருதியை விரோதிக்கின்ற விரோத நூலாம்; அஃது அநாத்த வாக்கியமென்பது, அதன் சாமர்த்தியமில்லாமையால் விளங்கும்.

துர்ப்பலமாகிய விரோதநூலாற் பாதிக்கப்படாத தன்மையே, பிரபலமாகிய சுருதியின் முதன்மையை உணர்த்தும் அனுமானம்; அதனை எதிர்மறையாற் பயக்கும் விரோதநூல் அனுமான காரண சத்தம்.

தாசீனசாத்திரம் சுருதியைச் சார்தலும் முரணுதலுமின்றி, ஐகிகார்த்தங்களை உணர்த்துகின்ற பொதுமநூல்; அது ஏகதேசத்திற் சுருதிவிடயங்களுக்கு இணங்குதலாற் பிரமாணமாம். இது சத்தம்.

இனி உலோகப்பிரசித்தி என்பது, உலகத்திலே நிகழும் பிரசித்தி; இது ஆரியலோகப் பிரசித்தி என விசேடிக்கப்படும்.

[ஆரியம்-நற்குலமுடையது. ரு .யது, நல்லது, பூசிக்கப்படுவது. உலோகம்-பூமி, சனம். பிரசித்தி-வழக்கம், பயிற்சி, வெளிப்பாடு, பரந்துநிகழும் நிகழ்ச்சி.]

ஆரியபூமி என்பது, ஆதிகுருவாகிய கடவுளும், அவனருள்பெற்ற திவ்விய சீடகணமுங் காலந்தோறும் வெளிப்பட்டருளிய நல்லிடங்களோடு கூடியதாய, ஆதியிற்றொடங்கி இடையறாது தொடர்ந்து நிகழுகின்ற நல்லியற்கையும, நறபொருளும், நற்சனமும, நற்சாத்திரமும, நல்லறிவும், நற்றொழிலும், நற்பயனும் என்னும் இவற்றை உடையதாயுள்ள சுத்தபூமி

ஆரியசனம் என்பது, ஆரியபூமியில் ஆதிதொட்டு வசிகின்ற நற்பரம்பரையும், நல்லறிவொழுக்கமும், நறபத்தியும், நற்சித்தியுமுடைய உயர்ந்தசனம்.

உலோகப்பிரசித்தி உலோகசம்பிரதாயமும், உலோகாசரணமும் என இருவிதமாம்.

[சம்பிரதாயம்-பாரம்பரியமாகவரும் உபதேசநியமம். ஆசரணம்-செய்கை, ஒழுக்கம், நடை.]

சண்டு உலோக சம்பிரதாயமாவது, இதுவே ஈசுவரீயமாகிய சுருதி எனவும், இதுவே சுருதியின் வாண பத சுர வாக்கிய உச்சாரணநியமம் எனவும இப்படியே சுருதியை நியமிப்பதாகிப், பண்டுதொட்டு நெடுங்காலம் பல ஆரியச்னங்களிடத்திற் பாரம்பரியமாகப் பயின்றுவரும் உபதேச நியமம். சம்பிரதாயம் பழையதும் பரந்து நிகழ்வதுமாயிருத்தலிற் கால தேச வியாபியாதலானும், நிகழ்விப்போருடைய தகுதியானுஞ் சமூலமாம் என உணரப்படும். இது சத்தம்.

[சமூலம்-மூலமுடையது.]

உலோகாசரணமாவது, சுருதிவிடயங்களை அதிப்பிரயாசத்தோடு உணர்தலும், உணர்த்தலும், அநுட்டித்தலும், அநுட்டிப்பித்தலும, பத்தி சித்தி சுத்தி முத்திகளைப் பெறுதலும், பெறுவித்தலுமாகிய ஆரியசனங்களின் செய்கையாம்; இவை காட்சியானும், கேள்வியானும், சரித்திரங்களானும் உணரப்படும். இது அனுமானம்.

இங்ஙனங் கூறப்பட்ட சுருதிசாமர்த்தியம், சாத்திரம், உலோகப் பிரசித்தி என்னும் மூன்றுஞ் சுருதியுணமைக்குப் பிரமாணமாம்.

அம்மூன்றனுட், சுருதிசாமர்த்தியம் சுருதியின் அகத்திருக்கும் பிரமாணமாதலின், ஆந்தரப் பிரமாணம் எனப்படும்; ஏனைச் சாத்திரமும், உலோகப்பிரசித்தியும் சுருதியின் புறத்திருக்கும் பிரமாணமாதலின். வாகியப்பிரமாணம் எனப்படும்.

[ஆந்தரம்-அகத்தது. வாகியம்-புறத்தது.]

வாகிய பிரமாணம் ஆந்தரப் பிரமாணத்தைச் சார்ந்து உபகாரமாய் நிற்றலின், அதனிலும் ஆந்தரப் பிரமாணமே பிரபலம்; ஆந்தரப்பிரமாணங்களுள்ளும் அநுமானங்கள் பிரபலம்; அவற்றுள்ளும், கண்டச் சுருதியிலுள்ளவை அங்கமடங்களோடு சுருதியிற் பிரிந்துநிற்குமிடத்து அவற்றின் மூலநிலையை ஆராய்ந்துணர்தல் கூடாமையின் அகண்டச் சுருதியில் உள்ளனவே பிரதானம். காட்சியானுணரப்படுவன வற்றிலும் உளையானுணரப்படுவனவே எல்லாருக்கும் உபயோகிகளாக்கப்படுவன; பிரதானங்களுக்கு ஆவசியக அங்கமாயின், அப்பிரதானமும் பிரதானமாம், ஆகலின் முதலாவதும், நாலாவதும், ஐந்தாவதுமாகிய அனுமானங்களும், மூன்றாவதாகிய சத்தமும் என்னும் நான்கும் பிரதானப் பிரமாணங்களாம்; அவற்றுள்ளும், சுருதியின் பொதுத்தன்மையோடு கூடிய சிறப்புத்தன்மையை நியதமாக உணர்த்தி, ஏனையவற்றையுந் தன்பாற்படுத்து நிற்றலின், ஐந்தாவதே அதிப் பிரதானப் பிரமாணமாம்.

அவ்வனுமானங்களைச் சுருக்கியடக்கிய இரண்டு அனுமானங்கள் பிரயோகிகக்கப்படுகின்றன:—

க.—இசசாத்திரம் ஆதிச்சுருதி, யுத்தியதிதார்த்தங்களை யுத்தியோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கியமாதலால், யாது ஆதிச்சுருதியன்று அது யுத்தியதிதார்த்தங்களை யுத்தியோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கியமுமன்று. சிவசாத்திரம் போல என்பது. இது கேவல ——ரேகியனுமானம்.

[யுத்தி-கருதல், பொருந்தல், பொருத்தல், நியாயம். அதீதம்-கடந்தது, மேற்போனது, எட்டாதது. அர்த்தம்-பொருள், பயன். யோக்கியம்-பொருந்துவது, இணங்குவது, ஏற்பது, தக்கது, விரோதமாகாதது.]

இதனுள்: "யுத்தியதீதார்த்தங்களை யுத்தியோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கியமாதலால்" என்றதே ஏது.

இதன் விவரணங் கூறப்படுகின்றது:—

யுத்தி என்பது அனுமானமும், அனுமிதியும், காணப்பட்டதைப் போலக் காணப்படாததைக் கற்பித்தலும், சாதக பாதகப் பிரமாணங்களைப் பிரயோகித்தலுமாம்.

[சாதகம்-சாதிப்பது.]

ஒரு பொருளிலே மாறுபட்ட இரண்டு தன்மையாகிய விகற்பம் இருத்தலின்மையின், நியாய வித்தியாப்பியாசம முதலியவற்றால் விளங்கிய புத்தியில், அப்பொருளைத் திருட்டாந்தமாகக்கொண்டு முயலும் யுத்தி, புருட புத்திதோறும் விகற்பமுடையதன்று; பொருள்களெல்லாம ஒத்தவியல்பும ஒவ்வாவியல்பும் உடையனவேயாதலின், அவ்வியல்புபற்றி முடிக்கப்படுந் தாட்டாந்திகத்திலும யுத்தி விகற்பமுடையதன்று.

[தாட்டாந்திகம்-திருட்டாந்தத்தான் முடிக்கப்படுவது.]

பொருளின் விசேடமுணராமை முதலிய குற்றம பற்றிய புத்தியின் முடியும போலியுத்தி மாத்திரம விகற்பமுடையதாம்.

யுத்தியதீதம் என்பது, அனுபூதி யுத்திகளாற் கிரகிக்கப்படுதற்கு யோக்கியமல்லாதது. யுத்தியதீதம் எனவே அனுபூதியதீதம என்பதும் விளங்கும.

சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய மூர்த்தகுணங்களும் வெளிப்பட்ட குறியும் இல்லாதனவும், நுண்ணியனவும், மறைந்தனவும், சேயனவும் யுத்தியதீதங்களாம்.

அர்த்தம் என்பது, அறியப்படுவதும் பெறப்படுவதும். இரு என்னுஞ் சாதுவின் ஆதேசமாகிய அர் என்பது போதலும், அறிதலும், பெறுதலும். தகாரஞ் செயப்படு பொருள் விகுதி. பதி பசு பாசங்களாகிய பொருளும், போக மோக்ஷங்களாகிய பயனும், அவற்றிலிச்சாசக்தியுமாம் அர்த்தங்களாம்.

யுத்தி யோகியமாகி என்பது, அவ்வவர்தார்த்தங்கள் எவையானுமாரப்படுமிடத்துத் தமமியல்பான் ஒன்றோடொன்று இணங்குதலும், திருட்டாந்தமாகிய பிறபொருளாகளின் இயல்போடு ஒருவாற்றானும் பலவாறானுமொத்து இணங்குதலும், ஓரோவழி அநுபூதி யுத்திகளானுணரப்படுமிடத்து விபரீதமாகாமையும் உடையனவாகிப், பரீக்ஷகருடைய யுத்திக்குப் பொருந்துவனவாகல். கால தேச பேதத்தில் வெவ்வேறு பொருள் விசேஷங்களையறிந்த பரீக்ஷகருடைய யுத்திக்கும் அவை யோக்கியமாயிருத்தல், சாத்திர லோகப் பிரசித்திகளால் உணரப்படும்.

ஆதிவாக்கியம் என்பது, பிறிதோர் வாக்கியத்தின்வழியே செய்யப்படாது முதல்வனால் முதற்கட்செய்யப்பட்ட மூலமாகிய வாக்கியம்.

இனி ஏது விசேஷணப் பிரயோசனங் கூறப்படு

ண்டு "யுத்தியதீத" என்பதனால் அநுபூதி யுத்தி யோகியப்பொருளை யோகியமாக உணர்த்தும ஆத்த சாத்திரங்களையும, "யுகதியோக்கியமாக" என்பதனால் யோக்கியப்பொருளையேனும, அதிதப்பொருளையேனும் அயோக்கியமாக உணர்த்தும் பிராந்த வஞ்சக சாத்திரங்களிலும, "ஆதி" என்பதனாற் சுருதியையுணர்ந்த பராபர அபராத்தராற் செய்யப்பட்டுச் சுருதிப்பொருளையே உணர்த்துகின்ற பிரகர

ண சாத்திரங்களிலும் இவ்வேதுவுக்கு வியபிசாரம் விலக்கப்பட்டது ஆதலின் இவ்வேது அநைகாந்திகமன்று ; விபக்ஷத்தில் இருத்தலினமையின் விருத்தமுமன்று;பக்ஷத்திலிருத்தல் உணரப்பட்டுழி, அசித்தமுமாகாது.

அங்ஙனமாக, நியாயவித்தியாதி சாத்திராப்பியாச சாமர்த்தியத்தால் விளங்கிய சமர்த்தபுத்தியுடைய அதி சமர்த்தனாகிய வஞ்சகனொருவன், தன்னாலுணரப்படாத அதீதார்த்தங்களைத் தன்புத்தியாற் கற்பித்து, அவை பிறர் யுத்தி பரீக்ஷைக்கு யோக்கியமாகும்படி தன் யுத்தி பரீக்ஷைகொண்டே நியமித்துக்கூறுவானாயின், அந்நூல் யுத்திக்கு யோக்கியமாக உணரப்படாதோ எனின், அது பயின்றவற்றையே யோக்கியமெனக் கொள்ளுமியல்பினராகிய இலௌகிகர்சிலருக்கு யோக்கியம்போன்று உணரப்படுமாயினும், சற்சாத்திரபரிசீலனமும், சூக்ஷ்மபுத்தியும், ஊகாபோக சாமர்த்தியமும் உடைய பரீக்ஷகர்களுடைய யுத்திபரீக்ஷைக்குப் பரஸ்பர விரோதம், திருட்ட விரோதம், அனுபவ விரோதம் என்பவற்றையுடைமையாற் பலவாற்றால் அயோக்கியமாகவே உணரப்படும்.

சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மனுடர் எத்துணைச்சாமர்த்தியம் அடையினும், அதீதப் பொருள்களைத் தம்மாற்றலாற் கிரகிக்கமாட்டார்; தாம்பெற்ற கருவிகொண்டு உணர்தற்கு யோக்கியமான பொருள்களுள்ளுஞ் சிலவற்றையே உணர்வர்; அவற்றுள்ளுஞ் சிலவற்றையே ஐயந்திரிபின்றியுணர்வர்; அவற்றுள்ளுஞ் சிலவற்றையே விசேடித்துணர்வர்; உணர்ந்தவற்றுள்ளுஞ் சிலவற்றை மறப்பர்.

அவர் தம்புத்தியால் விசேடித்துணர்ந்த பொருளைமாத்திரம் உள்ளபடியமைத்துக் [illegible] நூல்

யோக்கியமாம். அதிலும் ஓரோவழிக குற்றங்காணப் படும்.

"அரியகற்றாசற்றார்கண்ணுந் தெரியுங்கால்
இன்மையரிதே வெளிறு"

இனி உணர்ந்தபொருளோடு விசேடித்துணராத பொருளையுங்கலந்துகூறும் நூலிற் பல குற்றங்கள் காணப்படும்: ஆகவே உணரப்படாத பொருள்களைப் புத்தியாற் கற்பித்துப் பொருத்திக்கூறும் நூலிற் காணப்படுங்குற்றங்கள் அளவுபடுவனவா?

புத்தியானது, தனக்கு அடங்காத விடயங்களைக் கற்பித்து, யுத்தி பரீக்ஷைசெய்து நியமிக்கப்புகுங்கால், தன் சாமர்த்தியமிழந்து செலலவேண்டும்: செல்லவே, ஆண்டுத் தன் வியாபாரமுடித்தறகுத்தக்க கருவியாகாது; தகாத கருவியேயாம்; அதினுங் காம வெகுளி மயக்கங்களினாற் கலங்கிய புத்திமிகத் தகாத கருவியேயாம். தகாதகருவியான் முடிந்த காரியமாகிய நூல் தக்கதாகுதல் எங்ஙனம்?

"காரணந் தன்னோடொத்துக் காரியந்தோன்றும் யாண்டுங - காரணவிரோதியாகிக் காரியந் தோன்றலின்றே"

மனுடன் குறைவுடையனாதலின், அவனாலாகிய காரியங்களுங் குறைவுடையனவேயாம்; ஈசுவரசிருட்டியுஞ் சீவசிருட்டியுந் தம்மியல்பான் வேறுவேறாயிருக்கும். மனுடன் ஈசுவரசிருட்டியோடொப்பச் சிருட்டிக்கும்தகுதி ஒருகாலுந் தம வல்லனல்லன்; ஈசுவரசி [illegible] நினைப்பி, புத்தியுத்திகொண்டு இலக்ஷ [illegible] ஸ்க, [illegible]தின்னது என்றுதுணிதற்கு [illegible] ஆலோயாம். சுருதியும் ஈசுவரசிருட்டியாலி [illegible] சுருதியுந் தம்மியல்பாம் [illegible]

சுருதி கண்டங்களேனுஞ் சுருதிகண்டார்த்தங்களேனும் மனுடநூலிற்கலந்து வைக்கப்படினும், அவை தெரியுங்காற் பிரிந்துதோன்றும்; சுருதியோடொப்ப நூல்செய்தற்கு மனுடன் ஒருகாலத்தும் வல்லனல்லன்; சுருதியைப் பரீக்ஷித்து இது சுருதியன்று இதுவே சுருதி என்று துணிதற்கு வல்லனேயாம்.

குதிரையைச் செய்யமாட்டாத மனுடன் குதிரையைப் பரீக்ஷித்து நிச்சயித்தலும், இரத்தினஞ் செய்யமாட்டாதவன் இரத்தினத்தைப் பரீக்ஷித்து நிச்சயித்தலுந் திருட்டாந்தமாக, ஒருபொருளைச் செய்யமாட்டாராயும அதனைப் பரீக்ஷித்து நிச்சயித்தல் கூடுமென்னும் யுத்தி முடிக்கப்படும்.

ஆதலின், போலிச சுருதிகளெல்லாம் போலியிரத்தினங்கள்போலப் பரீக்ஷையாலளந்து தள்ளப்படும்; ஆதிச்சுருதி சாதியிரத்தினமபோலப் பாதிக்கப்படாமற் பேதித்து நிற்கும. இங்ஙனமாதலின், அவ்வேதுவுக்கு வியபிசாரமே இல்லை.

இனி இரண்டாமனுமானம்:— "சுருதிவாக்கியங்கள் தமது அர்த்தங்களை உள்ளபடியறிந்தவனாற் செய்யப்பட்டன, சமர்த்தவாக்கியமாதலின், யாது சமர்த்தவாக்கியம், அது தனது அர்த்தத்தை உள்ளபடியறிந்தவனாற் செய்யப்பட்டது, இலௌகிக ஆத்தவாக்கியம்போல; யாது தனது அர்த்தத்தை உள்ளபடியறிந்தவனாற் செய்யப்பட்டதன்று அது சமர்த்த வாக்கியமுமன்று, பிராந்த வாக்கியம்போல என்பது. இது அன்னுவய வியதிரேகியனுமானம்.

[சமர்த்தம்-சாமர்த்தியமுடையது.]

பொருளுணர்ச்சியின்றிச் சொல்லுணர்ச்சி மாத்திரங் காரணமாகச் செய்யப்பட்ட வாக்கியத்தின் ஏதுவுக்கு வியபிசாரம் விலக்குதற்பொருட்டுச் "சமர்த்தம்" என்னும் விசேடணங் கொடுக்கப்பட்டது.

சுருதியின் பரமார்த்தங்களைச் சுருதிஞானத்தானன்றி அனுபூதி ஞானமாத்திரத்தான் முதற்கண்ணே உள்ளபடியறிதற்குச் சீவர்கள்யாவருந் தக்கவரல்லராதலின், அதற்குத் தக்கவன் ஈசுவரன் என்பது பெறப்படும்.

இங்ஙனங் கூறப்பட்ட இரண்டனுமானங்களுஞ் சுருதியினுண்மையைத் துணிவித்தற்கு அமையும்.

உலகத்திலே உள்ள சீவர்களெல்லாருக்கும் உணரப்படுவனவற்றை உணர்ந்து, ஒழிக்கப்படுவனவற்றை ஒழித்துச், செய்யப்படுவனவற்றைச் செய்து, பெறப்படுவனவற்றைப் பெற்று, உறுதிப்பயனை உறுதல் அதுதியாவசியகமாகிய பரமப்பிரயோசனமாம்.

சீவர்கள் அப்பொருள்களனைத்தையுங் கண்டுணர்தற்குத் தக்க சுத்தானுபூதிக்கருவியைப் பெற்றவரல்லர், பெறுதற்குப் பக்குவர் ஆயினோருமல்லர்.

ஆதலின் அவற்றைத் தன்னனுபூதி மாத்திரத்தாற் கண்டுணர்ந்த ஈசுவரன் உபதேசிக்க, அச்சீவர் கேட்டுணர்தற்கு ஓர்கருவி வேண்டப்படும்; அதுவே சுருதியாம்.

ஆகவே சீவர்களை உணர்த்திச் செய்வித்து உறுதிப்பயனை உறுவித்தல் சுருதியின் பிரயோசனமாம்.

சுருதி நிரூபணம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சமய நிரூபணம்.

சமய இலக்கணம்.

சமயமாவது, சுருதியிலே நியமிக்கப்பட்ட பரமப் பிரயோசன சித்திக்கு அனுகூலமாகிய பதார்த்த நியமமேயாம்: பரசித்திக்கு அனுகூலமாகிய சிந்தாந்த பக்ஷமே சமயம் எனினுமொக்கும்.

[சித்தாந்தம்-முடிந்தமுடிபு.]

சமயம், மதம, மார்க்கம் என்பன பரியாயம்.

சமயம் என்பது நியமித்தலும், நியமித்தற் கருவியும், நியமிக்கப்பட்டதுமாம். நியமித்தலென்பது வரையறுத்தலும், துணிதலும், உடன்படுதலும், விதித்தலும், கட்டுதலுமாம்.

[இ-போதல், உணர்தல் என்னுந்தாதுவின் ஆதேசமாகிய அய் என்பது, சம் என்னும் உபசருக்கத்தை முதலிற்கொண்டு, உடன் போதல், உடன்படல், நியமித்தல் என்னும் பொருளுணர்த்திநின்றது. அ என்னும் விகுதி தொழிற்பொருளும், கருவிப் பொருளும், செயப்படுபொருளுங் குறிப்பதாம். "சமயமென்பது நியமமு முடன்பாடும், முடிந்ததுணிபு மொழுககமு மெல்லையும், குறியுங் காலமுஞ் சபதமுமாகும்" என்பது ஆரிய நிகண்டு.]

மதம் என்பது கருதப்பட்டதும், உடன்படப்பட்டதும், கோளுமாம்.

[மந்-அறிதல், கருதல், உடன்படல் என்பதாதது. த என்பது இறந்தகாலச்செயப்படு பொருளும், தொழிற்பொருளும் உணர்த்தும் விகுதி.]

மார்க்கம் என்பது தேடுதற்கருவியும், சுத்தியாகுதற்கருவியுமாம்.

[மார்க-தேடுதல்; மிருச் என்னுந்தாதுவின் அநேகாரிய மார்க-சுத்தியாகுதல் என்பன இரண்டும் பகுதிகள். அ என்பது கருவிப் பொருளை உணர்த்துபவ்விகுதி.]

சமயமானது குறித்தபொருளை அடைவிக்கும் வழி போலுதலின் மார்க்க பரியாயம் பெறுமென்றலும் பொருந்தும்.

பரமப் பிரயோசனமாவது, பேரின்பமாகிய முத்தியேயாம். முயற்சிக்கு ஏதுவாகிய இச்சைக்கு விடயமாவதே பிரயோசனம் என்பது.

சமய பதார்த்தம்.

சமய விடயமாகிய பதார்த்தங்களாவன, பதி, பசு, பாசம், பதிகிருத்தியம், பசுகருமம், பசுபோகம் முத்திசாதனம், முத்தி என்னும் எட்டுமாம்.

அப்பதார்த்தங்களைச் சாதி, பண்பு, தொழில் முதலிய இலக்கணங்களானும், பிரமாணங்களானும் நியமிப்பதே பதார்த்த நியமமாம்.

அப்பதார்த்தங்களுட் பதியாவான், சுவதந்திர சேதன கருத்தாவாகி எல்லாப்பசுக்களுக்கும் அனுக்கிரகஞ் செய்பவன்.

பசுவாவான், அறிவு இச்சை தொழில்களையுடைய சேதனனாய் அனுக்கிரகம் பெறுபவன்.

பாசமாவது, சடமாகி, ஆன்மாவின் முத்தியனுபவத்துக்கு விரோதியாயும், போகானுபவத்துக்கு அனுகூலமாயும் உள்ள பொருளாம்.

பதி கிருத்தியமாவது, பதியினுடைய தொழிலாம். அது சிருட்டி, திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என ஐந்தாம். அவை தமிழில் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும்.

பசுகருமமாவது, பசுக்களுடைய தொழிலாம்: அது புண்ணியம் பாவம் என இரண்டாம்.

பசுபோகமாவது, பசுக்களுடைய இன்ப துன்ப நுகர்ச்சியாம். பசுக்களின் கருமபோகங்களுக்கு உரியபூமிகள் மத்தியம், சுவர்க்கம், நரகம் என மூன்றாம்.

முத்திசாதனமாவது, முத்திசித்தியைச் சாதிக்குங் கருவியாயுள்ளது.

முத்தியாவது, ஆன்மாப் பாசசம்பந்த நீங்கித் தன் சுவரூபம் அடைந்துநிற்றல்.

சமயபதார்த்தப் பிரமாணம்.

காரியமெல்லாங் காரணமுடையனவாதலிற், காரியமாகிய உலகத்திற்கு நிமித்தகாரணமாகிய பதி ஒருவன் உளன்.

காரியமெல்லாம பயன்படுவனவேயாதலிற், காரியமாகிய உலகத்திற்றுற் படும்பயனைக் கொள்வோராகிய பசுக்கள் உளர்.

அப்பசுக்கள் நடுக்கப்பட்ட அறிவாற்றலுடையராகித், தம்வசமின்றிக், குற்றமுடையனவாகிய நாநாவித போகம்பற்றி உழத்தலின், அதற்குக்காரணமாகிய பாசம் உளது.

பதி பசு பாசங்களின் உண்மையைச் சாதித்தற்கு முறையே ஒன்பதும, ஆறும், மூன்றுமாகிய பிரதான அனுமானங்கள் தருக்கநூல்களிற் கூறப்பட்டன.

பாசஞ் சடமாதலானும், பசுத் தன்வசமிலியாத லானும், அவற்றின் வியாபாரத்துக்குக் காரணமாகிய பதிருச்தியம் உளது.

காணப்படுதலால் உலக ஸ்திதியும், காரியப்பொருளெல்லாந் தோற்றமும அழிவும் உடையனவாதலால் உலகத்தின் சிருட்டி சங்காரங்களும, உயிர்கள் அநாதிநித்திதமாகிய போகயோகபொருளிலும் பற்றுவைத்து யமுவாதுநிற்றலின் அதற்குக்காரணமாகிய திரோதானமும, முற்றறிவனது கிருத்தியங்களை முடிவின் முகிய பயன்றருங் கிருத்தியத்தை உடையனவாதலின் அனுக்கிரகமும் உள்ளனவாம. இங்ஙனமே பதிருருதியம் ஐந்துவிதம்.

மனிதவாழுக்கு காயங்களால் ஈட்டப்படுதலானும, போக நிமித்தமாதலானும் பசுகருமம உளது

போகமானது சுகமுர் துக்கமும் என இருவிதமாதலால், அதின் நிமித்தமாகிய கருமமும புண்ணியம், பாவம் என இருவிதப்படும்.

ஈட்டப்பட்ட வினையின் பயனாக அனுபவிக்கப்படுதலிற போகமும உள்ளது. சுகதுக்கங்களைக் கொடுத்து நுகர்தற்குரிய இடமாகிய மநுஷ்யபூமி இருத்தலின், அவற்றை மிகுதி யாறி வேறு வேறு நுகர்தற்குரிய இடமாகிய சுவர்க்க நரகங்களும் உள்ளன.

சாதனமின்றிச் சாத்தியம் முடியாமையாற், சாத்தியமாகிய முத்தியை முடிதற்குச் சாதனம உளது.

முற்றறிவனுடைய கிருத்தியத்தான் முடிவின் முடியும முக்கியப் பயனாதலின், முத்தியும உளது.

இங்ஙனமே அட்டபதார்த்தப் பிரமாணங் றப்பட்டது.

சமயநிரூபணம்முற்றிற்று.

சிவமயம்.

சைவச் சுருதி நிரூபணம்.

அநாதி பகவானாகிய சிவனால் ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கும்பொருட்டுப் பிரதம மகா சிருட்டியாரம்பகாலத்திலே செய்யப்பட்ட ஆதிச்சுருதியானது சாமானிய விசேடபேதத்தால் வேதம் ஆகமம் என இரண்டு மகா விபாகமாயிருக்கும்.

அவற்றுள் வேதமானது, இருக்கு, யசு, சாமம், அதர்வம் என நான்கு விபாகமாம்.

ஆகமமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், பிரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டு விபாகமாம்.

அச்சுருதி பரகுருவாகிய சிவனால் ஆதியில் உபதேசிக்கப்பட்டுப், பராபர குருக்களாகிய அனுசதாசிவ வித்தியேச மந்திரேசுர்களாலும், அபர குருக்களாகிய முனி தேவ மனுடர்களாலும் வழிமுறையாகப் போதிக்கப்பட்டுப், பூமியில் வந்து வழங்குகின்றது

அது சுருதிலக்ஷணமுஞ் சுருதிவிபாகலக்ஷணமுங் குறைவற உடையதாய், ஆறுவகைப்பட்ட அங்கநூல்களோடு கூடினதாய் இருக்கின்றது.]

அச்சுருதியின் பிராமாணியமானது, சுருதிசாமர்த்தியம், சாத்திரம், லோகப்பிரசித்தி என்னும் மூன்றானுஞ் சாதிக்கப்படுகின்றது.

அச்சுருதியின் சாமர்த்தியஞ் சுருதியால் நியமிக்கப்படுகின்ற சைவ சமயபதார்த்தங்களின் பொருத்தம் ஆராய்ந்து துணியப்பட்டவழி விளங்கும்.

அச்சுருதிக்கு அனுகூல சாத்திரங்களாவன, புராணங்களும், மிருதிகளும், தரிசனநூல்களும், உபாகமங்களும், வைத்தியம், சிற்பம், கணிதம் முதலியனவுமாம்.

சுருதிக்குப் பிரதிகூல சாத்திரங்களாவன், உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், விவிலியம முதலாயின. அவற்றிற்கூறப்பட்ட சமயபதார்த்தங்களின் பொருந்தாமை ஆராய்ந்து துணியப்பட்டவழி அவற்றின் துர்ப்பலத்தன்மை விளங்கும்; விளங்கவே சுருதியின் பிரபலத்தன்மை தெளியப்படும்.

பூலோகத்லே உத்தமோத்தம மகத்துவமுடைய பரதகண்டமும, அதில்வசிக்கின்ற மகாசனமுமே ஆரியலோகம எனப்படும்.

ஆண்டுள்ள சமயவிடயப் பிரசித்தியே லோகப்பிரசித்தி எனக் கொளளற்பாலது.

அச்சுருதியால் நியமிக்கப்பட்ட பதார்தத நியமமே சைவசமயம் எனப்படும்.

[சைவம்-சிவனாற் செய்யப்பட்டது, சிவனைத் தெய்வமாகவுடையது, சிவசம்பந்தமுடையது. சைவன் என்பது சிவபத்தன் என்றபொருளுமுடைத்து.]

சைவச் சுருதி நிரூபணம் முற்றிற்று

சிவமயம

சைவசமய நிரூபணம்.

பதி

இனி அச சைவசருதியிற கூறபபடட பதிமுதலிய பதாரதாததங்களின நியமம மிகசசுருககி முறையானே கூறபபடும

[பதி-காகிறபவன பா-காதகல பி-விளமுதா பொருளன விகுதி.]

உலகங காரியமாயிருதலால அதறகுக காரகமாகிய கருததாவும, கரணமும, நிமித்தமும, உபாதானமும உளவென அனுமானபபடடு றனக கதாக [illegible] யருசெ [illegible] மிருகாரி [illegible] காரி [illegible] னவ [illegible] ரியா [illegible] னவ [illegible] சடு [illegible] மாவுர [illegible] தல [illegible] யமிடாறுவாற காரணேசாகளாக [illegible] யின அநாதிநிதிய வியாபக [illegible] மாவுங குறிகப டுகின்றனன

அநாதியும வியாபகனுந தேசனுமாகிய கருதாவுககு, ஆதியும அவியாபகமுஞ சடமுமாகிய கரணம பொருநதாமையின, அககரணதாவின சாமாநியமே கரணமெனக கொளளபடுகிறது

அநாதி மலபெதத சீவாகருகுகுரிய போகமோகஷ பிரயோசனசிததியே நிருததிய நிமிகதமாம

காரியம அநாதியாகவே மாறிமாறித தோனறி ஒடுங்கலானும, வியாபிததலானும, சடமாதலானும

அசறரு அநாதி நிரதிப வியாபக சடவஸதுவாகிய மாயையே உபாதான காரணமாம.

சுவ ரிர் வியாபக கருகாவுகு ஆரரம வேணடடபடு தி சடவகருதாவின ரூனமுங கிரியையு அநாதியே சமாகாமாகி விளநகசலின, அவை வின குரனவிடாடுச ரீரமுதலிய பிறகருவி வேணடடபடா கருதாவின சரசியே சரீரகாரியமியறறகலி ரீரமெனறு கறபககபபடும

கருதாவிர கிநாயிற சிறடடி, திதி சங்கரரம, சி ராதானா, அனுகிரகம என ஐநத ம அனுகசிரகா ஒன றபிரசானம

சரரதாவினது தனமை கருதிருததுவம எனபபடும.

கருதிருகதுவமாவது, கிருதிபமுடி புககுச சுவதநதிர காரகமாகறறனமை அஃது அநாதி சிதுதமாம. அநதக கருதிருகதுவகதிற காரிய சனன அனுகூலமாகிய காரண சாமகரியோடு கூடிய சஞாறபரூபமாகிய அவிகாரகிருததியம வெளிபபடும அகினுலே சடவஸதுவின சலனரூபமாகிய விகாரகரியை பிறககும அகனுற காரியமுணடாம இஙஙனமாதலிற கருதசா அவிகாரியே எனபது

[சனனம-பிறததல சாமகரி-முழுமை சலனம-புடைபெயாசசி].

இஙஙனங கூறபபடட பஞசகிருததிய கருததாவாகிய பதிககு உரிபனவாகிய பிரதான குணங்களமுறறறிவு, வரமபிலினபம, அநாதியறிவு, தனவசம, குறைவிலாறறல வரமபிலாறறல என ஆறும.

சருவகருததாவுகு எலலாபபொருளையும புலபபடககாணுகினற அறிவு உளளவழியனறி எலலாககிருதியமுஞ செயதல கூடாமையின முறறறிவும, இனபககுனறவுணடாயின, தனது அனுபவநிமிததம பிறிதினை வேணடுதலுமுணடாம ஆகவே சருவ கருத

திருத்துவவிரோதம் எய்துமாதலிற் குறைவற்ற நிறைவாகிய வரம்பிலின்பமும, முற்றறிவு அநாதியன்றி ஆதியாயிற் காரணத்தாலே வந்ததெனின் வரமபின்மைக்குற்றமும், காரணமினறி வந்ததெனிற் காரணகாரிய சமபந்த நியமபங்கப் பிரசங்கக் குற்றமும எய்துமாதலின் அநாதிபறிவும், பிறர்வசமுணடற் பாசத்தடையுமுண்டு என்பதுபோதலின, வேணடாத தெய்தலும் வேணடியபதெய்தாமையுமாகிய குற்றம பற்றுமாதலின் தன்வசமும், ஆற்றல் குறையுமமல் எல்லாக் காலத்தும் எல்லாத் தேசத்தும் ஏவலபின்றிக் கிருத்தியமியறறுதல் இயலாமையிற் குறறவிலாற்றலும், அவ்வாற்றல் வரையபபட்டதாயின் வரையப்படாத கிருத்தியமியற்றுதல் கூடாமையின் வரம்பிலாற்றலும ஆகிய இவ்வாறு குணங்களும் பதிக்கு வேண்டபடுகின்றன.

இங்ஙனமே அநாதிமலமுத்தனாய்ச், சுத்தசாட்குண்ணிய டரிபூரணனாய், அநாதி பெத்தராகிய பசுக்களுக்கு உபகரிக்குமபொருட்டுத் தனது சத்தியென்னுங் கருவியைக்கொண்டே பஞ்சகிருததியஞ் செய்யுமியல்பினனாய், இலயம், போகம், அதிகாரம் என்னும் வியாபாரபேதத்தால் ஈசன், சதாசிவன், சாந்தன் என்னும் மூவித ஸ்வரூபமுடைய ஒருவனேயாய் உள்ள பரமசிவனே பரமபதி என்பது சைவச்சுருதி சித்தம்.

பசு.

காரியமாகிய உலகம் அசேதனமாதலாலே தனக்கும், வரம்பிலின்பமுடையனாதலாற் பதிக்கும், குடமுதலியனபோலப் பரிணாமமுடைமையானும், அனுபோகிக்கப்படுதலானுஞ் சடமேயாதலிற் சரீரத்துக்கும் பயன்படுவதன்று; விசேடகருத்தாவாகிய பதியினாற செய்யப்பட்டமையிற் பயனற்றதுமன்று: ஆதலிற் பிறர்க்குப் பயன்படுவதே என்பது பாரிசேடப் பிரமாண சித்தம்.

அப்பிறராவார்,—"நான் இருக்கின்றேன் நான் உணர்கின்றேன்" என்றற்றொடக்கத்து வழக்கங்களி

லே தனித்தனியே "நான் நான்" என்னுஞ்சொற
ருகுகு விடயங்களாயுள்ள ஆன்மாக்களே.

அவ்வான்மாக்கள் அநாதி பாசபந்தமுடையை
யிற பசுக்களென்று சொல்லப்படுவர்.

[பச்-பந்தித்தல். உ-செய்படுபொருள் விகுதி.]

அப்பசுக்கள் விஞ்ஞானாகலா பிரளயாகலர், சகலா
என்னும் மூவகையா. அவாகளுள், விஞ்ஞானாகலர்
ஆணவமலமாத்திரம உடையவா, பிரளயாகலா அத
னோடு கருமமலமும உடையவர்; சகலர் அவற்றோடு
மாயாமலமும உடையவர்.

அப்பசுக்களுட் கருமநாசத்தால் அறிவக்குவமலராயி
னர், சமஸ்த பாசத்தின் நீங்கிட பாச தராயிருப்பர்.

பக்குவமலராயினோ பாசநாசத்தாலிட, பாசவாச
னைமாத்திரம் நீங்காமல் அபாரமுக்தராயிட, பதியின்
ஆஞ்ஞையினால் அதிகாரநிருத்தியரு செய்துகொண்
டிருப்பர்.

அற்ப பக்குவரும், அபக்குவரும் ஸம்ஸாரிகளாயி
ருந்து தத்தமக்கியன்ற தொழிலியற்றுவா.

இங்ஙனமே அகண்ட பூரண நித்திய வியாபக சச்
சிதானந்த ரூபராய், அமூர்த்தராய், அநாதியாகவே
பாசத்தால் மறைக்கப்பட்ட சிற்சத்தியுடையவராய்.
மலசம்பந்தத்தால் அறிவிலராய், மாயாசம்பந்தத்தாற்
சிற்றறிவராய்ப், பாச முத்தியின் முற்றறிவராதற்குயோ
க்கியராய் உள்ள ஆன்மாக்களே பசுக்கள் என்பது.

பாசம்.

உலகத்திலே கட்டுப்பாட்டுள் அடக்கப்படாதவனு
ம் விடுதலை பெற்றிருப்பவன் தன்வசமுடையவனுத
லும், கட்டுப்பாடுற்றவன் பரவசமுடையவனுதலும்
பிரசித்தமாகும்.

பசுக்கள் வேண்டாததுபெறுதலும், வேண்டியது பெறுமையும் உடையரேயாய் இருக்கின்றனர். இங்ஙனமிருத்தல் பரவசமெனப்படும். பரவசமுடையராகவே கட்டப்பட்டவரென்பது நிச்சயிக்கப்படும். ஆதலிற் கட்டிய கருவியே பாசம் என்பது.

[பச்-பர்தித்தல். அ. கருவிட்பொருள்விகுதி]

அகண்ட நித்திய வியாபக சத்தும், சடமும், அமூர்த்தமும, பரதந்திரமும், கழிவனவாகப் பரிணமித்தற் கேற்ற சத்திகளையுடையதும், அஞ்ஞான காரணமும், திரவியரூபியும், ஆன்மசிற்சத்திப் பிரகாசத்தை மறைத்து நிற்பதும் ஆகிய ஆணவமலமே பிரதான பாசமாம்.

அகண்ட நித்திய வியாபக சத்தும், சடமும், அமூர்த்தமும், பரதந்திரமும், காரியரூபமாகப் பரிணமித்தற்கேற்ற சத்திகளையுடையதும், அற்ப ஞானப் பிரகாசமும், திரவியரூபியும், காரியபதார்த்தங்களின் முதற்கார்ணமும் ஆகிய மாயையும் பாசமாம்.

பிரவாக அநாதியும், உற்பத்தி நாசம் உடையதும், அவ்வியாபகமும், சத்தும், சடமும், அமூர்த்தமும், பரதந்திரமும், விசித்திரமும், போக நிமித்தமும், குணரூபியும், மாயையிலிருப்பதும், ஆன்மாக்களுடைய நாநாவித போக பதார்த்த சம்பந்தத்துக்கு நிமித்தகாரணமும் ஆகிய கருமமும் பாசம் என்று சொல்லப்படும்.

காரிய பதார்த்தம் காரணமுடையதாய்க், கண்டமாய், ஆதியந்தமுடைய அநித்தியமாய், அவ்வியாபகமாய்ச, சத்தாய்ச், சடமாய், அமூர்த்தமேனும் மூர்த்தமேனுமாய், அவயவமுடையதாய்ப், பிரிக்கப்படுவதாய், இயங்கியற்றொழில் உடையதாய்ச், சார்புடையதாய் இருக்கும்,

ஆணவமலசத்தி காலத்தாறு பாகமடைந்ததாகியே, ஆன்மசத்தியை மலத்தினின்று நீங்கும், நெற்றி நடலம் போல.

கரும மலமுங் காலக் கரத்திற் பாகமடைந்ததாகியே, போகமலங் கொடுத்து நீங்கின அழியும், கடுக்காய்முதலிய பழுத்தும்போல

பாகமடைந்தறிகுறி பொருளெல்லாம் பிறவி தருவினைக் கார்ந்தே பாகமடையும், பால்போல.

அவனவனமே பசுத்தன் யாபாகாரியங்களிற் றாடு நலந் தேயாகப்பலவுபுர அபபாவ உயிர்களன் பலிருந்திகளிற் காவர்தோறும் மொழி பொறு போமாக உண்டாகும்.

மலபாக தாரதமியம் காலத்தாலே உயிர்களுக்கு முத்திசாதனங்களும், பத்தி, சிரவணம், கேளை முதலிய சாதனங்க குணங்களும், உரியகாலமும் அநேகபேதமாம் அதனால் முத்தியும் அநேகவிதமாம.

பதி கிருத்தியம்.

பதியானவன், கூடஸ்த நிதிய மலத்தோடும், பிரவாக நித்திய கருமத்தோடும் அநாதி சம்பந்தமுடையவராசிய ஆன்மாக்களுக்கு மோக்ஷங் கொடுத்தற்பொருட்டுக் கொண்ட பெருங்கருணையினாலே சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம, அனுக்கிரகம் என்னும் ஐந்தொழில்களை அநாதியே செய்கின்றான்.

சிருட்டியாவது, முதற்காரணத்திலிருந்து காரியத்தை வெளிப்படுத்தலும, சேதனர்களுக்குத் தேகங்களைக்கூட்டி மறைந்திருந்த அறிவு இசசை தொழில்களை வெளிப்படுத்தலுமாம்.

அசேதன சிருட்டியுள், மாயைமுதலிய காரணத்திலிருந்து மண்முதலிய தத்துவங்களைப் பிறப்பித்தல்

தத்துவசிருட்டி எனவும், தத்துவத்திலிருந்து போக தேகரூபமாகிய தாத்துவிகங்களைப் பிறப்பித்தல் தாத்துவிகசிருட்டி எனவும் பெயர்பெறும்.

திதியாவது, வெளிப்படுத்தப்பட்ட காரியப்பொருள்களைத் தத்தந்தொழிலிலே நிலைபெற நிறுத்தலும், தேகசம்பந்தமுடையராகிய சேதனர்களைத் தத்தம விடயத்திலே நியோகிக்க நிறுத்தலுமாம்.

சங்காரமாவது, காரியங்களை முதற்காரணத்தின் மறைத்தலும், சேதனர்களுக்குத் தேகங்களைப்பிரித்து அறிவு இச்சை தொழில்களை மறைத்தலுமாம்.

திரோபாவமாவது, பாசங்களுக்குச் சாமர்த்தியமுண்டாக்குதலாகிய அனுக்கிரகத்தைச்செய்து, அதனால் சேதனர்களை ஏற்றபோகங்களை வழுவாமல் உண்ணும படி தடுத்தல்.

அனுக்கிரகமாவது, பாசங்களுக்குச் சாமர்த்தியந் தடுத்தலாகிய திரோபாவத்தைச் செய்து, அதனாற்சேதனர்களுக்குக் கலப்பற்ற சுத்த ஸ்வரூப சாமர்த்தியம் உண்டாகும்படி தீக்ஷையால் உபகரித்தல்.

ஐந்தொழில்களுள், அனுக்கிரகம் ஒன்றே மோக்ஷத்துக்குக் காரணம்; ஏனைய நான்கும் அனுக்கிரக நிமித்தமாகிய மலபாகத்துக்குங் கருமநாசத்துக்குங் காரணமாகிய போகத்துக்குக் காரணம்.

அவற்றுள்ளுஞ் சங்காரம், கருமபாகத்துக்கும் மாயா சாமர்த்திய உற்பத்திக்கும் உயிர்களின் இளைப்பாறுதற்கும், சிருட்டி, போகசாதன சம்பத்திக்கும், திதி, பக்குவ கருமபோகத்துக்குங் கருமார்ச்சனத்துக்கும், திரோபாவம், போகத்தில் அமிழ்ந்தற்குங் கருமநாசத்துக்கும் மலபாகத்துக்குங் காரணமாம்.

[கருமார்ச்சனம்-கருமங்களை ஈட்டுதல்.]

அநாதி முத்த பரசிவன் பிரதம மகாசிருட்டி காலத்திலே, சுத்தமாயையிலிருந்து பொருட் பிரபஞ்சமுஞ் சொற்பிரபஞ்சமுமாயிருக்கின்ற சுத்த தத்துவம் ஐந்தையும், சுத்த புவனங்களையும், சுத்த போக்கியப் பொருள்களையும, சுத்த சுத்தாசுத்த அசுத்தாத்துவ வாசிகள் எல்லாருக்குந் தனித்தனி வேண்டப்படுகின்ற நாதரூப பரதேகங்களையும், சுத்தாத்துவாவிற்கு உரிய சூக்கும ஸ்தூல தேகங்களையும், சுத்தாத்துவ வாசிகளாகிய அணுசதாசிவர் வித்தியேசர் மந்திரர் முதலிய தேகிகளையும், வேதாகமங்களையும் படைத்து, நியதகாலபரியந்தங் காத்து, அவாந்தரத்திற் சிலவறறையும, பிரதமமகா சங்கார காலத்தின் முழுதையுஞ் சங்கரிப்பன்.

வித்தியேசருள்ளே தலைவனாகிய அனந்தேசுவரன் மகாசிருட்டிகாலத்திலே, அசுத்தமாயையிலிருந்து புவனக்கொத்துஞ் சூக்கும தேகக்கொத்தும் என்னும் இருவிதமாயிருக்கின்ற காலாதி பிருதிவியந்தமான முப்பது தத்துவங்களையும், சுத்த அசுத்தாத்துவ வாசிகளாகிய சிறீகண்டன் முதலிய தேகிகளையும் படைத்து, நியதகால பரியந்தங்காத்து, அவாந்தரத்திற் சிலவற்றையும், மகாசங்கார காலத்தின் முற்றையும், சிறீகண்டாதித் துவாரத்தாலுந் தானாகவுஞ் சங்கரிப்பன்.

குண நிலயச் சிறீகண்டருத்திரன் மத்திய சிருட்டி காலத்திலே, பிரகிருதியிலிருந்து புவனாதாரக் கொத்துமாததிரமாயிருக்கின்ற குணாதி பிருதிவியந்தமான இருபத்துநான்கு தத்துவங்களையும், போக்கியப்பொருள்களையும், தூல தேகங்களையும், அசுத்தாத்துவ வாசிகளாகிய பிரமா விட்டுணு முதலிய தேகிகளையும் படைத்து, நியதகால பரியந்தங் காத்து, மத்தியசங்காரகாலத்தின் முற்றையுஞ் சங்கரிப்பன்.

குணநிலயப் பிரம விட்டுணுக்களும், பிரமாண்ட நிலயப் பிரம விட்டுணுக்களும் அதமசிருட்டி காலத்திலே, குணநி பிருதிவிபந்த புவனங்களிற் போக்கியப்பொருள்களையும், தூலதேகங்களையும், தேவர் முதலிய தேகிகளையும் படைத்துக் காப்பர்.

அவருள்ளும் பிரமனானவன், பிரசேசர், சோமர், தேவர், கந்தருவர், யக்ஷர், ரக்ஷர், பிசாசர், மனுடர், ராவாய, சரீசிருபம், பசு, பக்ஷி, மிருகம் என்பவற்றையும், நக்ஷத்திரம, சிராம், தூமகேது, மேகம், மலை, கடல், யாறு முதலியவற்றையும் படைத்தான்.

[சோமர்-பிதிர்கள். சரீசிருபம்-ஊர்வன.]

பிரமனும், விராட்டும், பிரசேசரும், பிறரும் நித்தியசிருட்டி காலத்திலே, பிரமாண்டத்துப் படைக்கின்றனர், விட்டுணுமுதலாயினோர் ஈரகின்றனர்.

சிறீகண்டரால் ஏவப்படுகின்ற காலாக்கினிருத்திரன் அதமசங்கார காலத்திலும், நித்திய சங்கார காலத்திலும் தானாகவுந் இயமன் முதலியவராலுஞ் சங்கரிப்பன்.

இங்ஙனம் பிரதம மகாசிருட்டி, மகாசிருட்டி, மத்தியசிருட்டி, அதமசிருட்டி, நித்தியசிருட்டி என ஐவகைச் சிருட்டியும் அப்படியே ஐவகைச் சங்காரமும் உள.

திரிகாலத்திலே திரோபாவமும், அனுக்கிரகமும நடக்கும்.

இனிக் கால பரிமாணங் கூறப்படுகின்றது.

மனுடருடைய வருஷந் தேவருக்கு ஒருதினமாம்: அதில் உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம இரவுமாம். முநூற்றறுபது தேவதினங்கூடினால், ஒரு

தேவவருஷம பன்னிரண்டாயிரந் தேவ வருஷங
கூடினால், ஒரு தேவயுகம: அதுவே சதுர்யுகமாம.
முப்பத்தொரு தேவயுகங கூடினால், ஒரு மன்னுவ
ந்தரம. இந்திராயுககாலமும அவ்வளவினதேயாம.
ஆயிரந் தேவயுகந் திரும்பினால், பிரமனுக்கு ஒரு ப
கலாம. ஒரு பிரமப்பகலிலே பதினாலு மன்னுவந்த
ம உள: ஆறு தேவயுகஞ் சேடமாம. பின்னும
ஆயிரந் தேவயுகந திரும்பினால், பிரமனுக்கு ஒரு
இராத்திரியாம் ஆகவே இரண்டாயிரந் தேவயுகம
ளா பிரமதினமாம. முந்நூற்றறுபது பிரமதினம் ஒ
ரு பிரமவருடமாம. ஈ பிரமவருடம பிரம்மாயு
ளாம. [illegible] இரண்டுகூடினால், வி
[illegible] திவ்ய முந்நூற்றறுபதுகூட
ம, விஷ்ணு வருடமாம. விஷ்ணுவருஷம் [illegible]
[illegible], விஷ்ணு ஆயுட்காலமாம. விஷ்ணுவாயு
[illegible] கூடினால், ஈசுரதிர தினமாம. ஈ
சுரதிரதினம் முந்நூற்றறுபது கூடின், ஈசுரதிர வ
ருஷமாம. ஈசுரவருஷம் பராரார்த்தங கூடின், ஈ
சுரதிராயுக்காலமாம. ஈசுரதிராயுக்காலம இரண்டு
கூடின், சதாசிவ தினமாம. சதாசிவதினம முந்நூற்ற
றுபது கூடின், சதாசிவவரு
ஷமாம.

பிரமப்பகலிலே நித்தியசங்காரமும, பிரமப்பகலி
ன் முடிவிலே திரிலோக விஷயமாகிய அதம சங
காரமும், பிரமாயு முடிவிலே குணாதி பிருதிவியந்த
விஷயமாகிய மத்திய சங்காரமும், உருத்திராயு முடி
விலே மாயாவிஷயமாகிய பிரதம மகாசங்காரமும்
நிகழும்.

பசுகருமம்.

பசுக்கள் சரீரமெடுத்துக்கொண்டு அநாதி கருமத்தி ன்வழியே போகம் புசிக்கும்போது செய்யுங் கருமங்க ள், புண்ணியம் பாவம் என இருவிதமாம்.

புண்ணியமாவது, விதிக்கப்பட்ட வினைவடிவமாய் ச. சுகசாதனமாய் இருப்பது.

பாவமாவது, விலக்கப்பட்ட வினைவடிவமாய்த், துககசாதனமாய் இருப்பது.

அல்லநாஉம் உயிர்க்கு இதஞ்செய்தலே புண்ணி யம்; உயிர்க்கு அகிதஞ் செய்தலே பாவம.

[புண்ணியம்-சரியானது, நலமானது, அழகியது
பாவம்-தீயது, கேடானது]

புண்ணியங்களாவன,—பத்தி, கருணை, மைத்திரி, மூதிதை, உபேகைஷ, நீதி, பொறை, அடக்கம், ஆத ரம, இலஜ்சை, சிரத்தை, கொல்லாமை, மெய்மை, கள்ளாமை, காமியாமை முதலியனவும், சௌசம் சந்தியாவந்தனம், பூசை, செபம், தவம், தானம், ஓதல் முதலியனவுமாம.

பத்தி,—ஈசுவரனிடத்தும உயர்ந்தோரிடத்தும பற் றுதலாம.

கருணை,—உயிர்களுடைய துக்கத்தை மாற்ற விரும பல

மைத்திரி,—புண்ணியஞ் செயவோரிடத்துச் சிநேகம்

மூதிதை,—சுகிகளிடத்து உவகை.

உபேகைஷ,—பாவிகளிடத்தில வெறுப்பு.

நீதி,—பலருந் சுகமடைய நடத்தும் முறை.

பொறை,—பிறர்செய்த தீமையை மாறுசெய்யாது சகித்தல்.

அடக்கம்,—குலம், கலவி, செலவம் முதலியவற்றால் யாவுபெற்றிருந்தாலுஞ் செருக்கறுத்தனனாக் கீழ்ப்படுத்தல்

ஆதரம்,—உபசரித்தல்

ஓலசை,—தகாக்காரிய முயற்சியிலே மனத்தைச் சுருக்கல், பழிக்கப்பட்ட செயகையின் விலகுதல்

சிரத்தை,—ஆராயப்பட்ட பொருளிலே இஃது இப்படியேயன்றிப் பிரிதுபடியன்று என நிக்கமும் நிச்சயபுத்தி

சொல்லலாமை,—உயிரை உடம்பின் நீக்காமை.

மௌனம்,—வாளாடி கூறல்

களவாமை,—பிறர்பொருளை அனுமதியின்றி மறைவாகக் கவராமை

காமியாமை,—விலக்கப்பட்ட பெண்களைப் புணர்விருப்பாமை

அசாசரம்,—நட்சலம் முதலியவற்றால் சுத்திசெய்தல்

சுத்தியாவசனம்,—நல்குத்தியானிக்கப்படுங் கடவுளை நியத காலத்திலே வழிபடல்

நிசை,—ஈசுவரனை விமபத்திலே பாவித்து, உபசரித்து, உபாசித்தல்

செபம்,—வாசியப்பொருளாகிய ஈசுவரனை எதிர்முகமாக்குதற்பொருட்டு, வாசகமாகிய மாந்திரத்தை உச்சரித்தல்

தவம்—மனம் இந்திரியவிடயத்திற் போகாமல் ஈசுவரவிடயத்திலே நிற்றற்பொருட்டு, உணவைக் குறைத்து உடம்பை ஒறுத்தல்.

தானம்,—நீதிவழியாற்பெற்றதொருளைப் பிரத்தியுபகாரங்குறியாது சற்பாத்திரருக்கு அன்போடு கொடுத்தல்.

ஓதல்,—நல்லறிவு உதித்தற்பொருட்டு மெய்ந்நூல்களைப் படித்தல்.

பாவங்களாவன,—ஈசுவரநிந்தனம், சீவவிரோதம், துரோகம், காமம், உலோபம், கார்ப்பணியம், மத்சரம், வஞ்சனம், மதம், அநாதரம், கோபம், அருவையொப்பு, குறளை, கடுஞ்சொல், கொலை, களவு, வியபிசாரம், நன்றிமறத்தல், புலாலுண்ணல், கள்ளருந்தல், அசௌசம், நித்தியகருமலோபம் முதலியனவாம்.

ஈசுவரநிந்தனம்,—கடவுளை நிந்தித்தலும், கடவுளுக்குப் பிழைசெய்தலும், கடவுளிற் பற்றன்மையும், கடவுளாணையைக் கடத்தலுமாம்.

சீவவிரோதம்,—சீவர்களிற் பகைசெய்தல்.

துரோகம்,—கெடுக்கவிரும்பல்.

காமம்,—தகாத காரியத்தில் விரும்பல்.

உலோபம்,—அநியாயமாகப் பிறர் பொருளில் விரும்பல்.

கார்ப்பணியம்,—உதிதகாரியத்திற் செலவிடாது பொருளைக்காக்க விரும்பல்.

மத்சரம்,—பிறருடைய நன்மையைத் தடுக்க விரும்பல்.

வஞ்சனம்,—உள்ளதை மறைத்து இல்லதைக் காட்டல்.

மதம்,—செருக்கு; தன்னிலே இல்லாத குணங்களை எற்றித் தன்னுயர்ச்சி கருதல்.

அநாதரம்,—அவமதித்தல்; பற்றின்மை.

கோபம், —வேண்டப்பட்டது தடைப்பட்ட விடத்துத் தோன்றுகின்ற மனக்குழப்பம்; வந்த தடையிலே முரணுதல்.

அருமை,—பிறருடைய குணத்திற் குற்றமேற்றல்.

பொய்,—இல்லது கூறல்.

குறளை,—ஏப்பசுனம்; காணாதவழிப் பிறனா இகழ்ந்து கூறல்.

கடுஞ்சொல்,—நிட்டுரவசனம்.

கொலை,—உயிரை உடம்பின் நீக்கல்.

களவு,—பிறரது பொருளை அபகரியின்றி மறைவாகக் கவருதல்.

காமவிசாரம,—நியமந்தவறிப் புணருதல்.

நன்றிமறத்தல்,—பிறர்செய்த நன்மையைமறத்தல்.

பொலாவுன்னல்,—உயிரிற் பிரிந்த பிணத்தையுண்டல்.

கள்ளருந்தல்,—வெறிக் காரண மாகிய சாற்றையுண்டல்.

அசௌசம்,—சுத்திசெய்யாமை.

சித்தியகருமலோபம்,—நியதகாரியமாகிய சந்தியாவந்தனம் முதலியவற்றை விடல்.

மெய்யறிவே சகல புண்ணியங்களுக்கும் மூலமாம். விபரீதவறிவு சகல பாவங்களுக்கும் மூலமாம். சிவபத்தியுஞ் சீவகருணையுமே பிரதான புண்ணியங்களாம். சிவதூஷணமுஞ் சீவவிரோதமுமே பிரதான பாவங்களாம்.

இப்பசுகருமங்கள் பதிநியமத்தாற் போகத்துக்குச் சாதனமாமன்றிச் சுவதந்திரசாதனமாவன அல்ல. பசுபுண்ணியத்தாற் சுகபோகமன்றி முத்தி சித்தித்தல் இல்லை.

பசு போகம்.

பசுபோகமாவது, விடய விம்பிதமாகிப் போக்கிய ரூபமாகிய புத்தியின் சாயையின் சம்பந்தத்தினாலே பசுவின் சிற்சத்தியில் ஆகின்ற உணர்ச்சி விளக்கமேயாம்.

அந்தப் போகமானது, சுகமுந் துக்கமுமென இருவிதமாம்.

பசுக்கள் சிருட்டிமுதலாக நிலைபெற்ற பரதேக சூக்கும தேகங்களை விடாது தரித்துநின்று, புண்ணிய பாவக் கலப்பினாலே மத்தியலோகத்திற் சென்று, பூதபரிணாம உற்பூதமாகிய தூலதேகத்தைத் தரித்துச், சுகதுக்கங்களை அனுபவித்துப், புண்ணியபாவங்களைச் செய்து முடிவிலே தூலதேகத்தை விடுவர்.

[பரிணாமம்-திரிபு; உற்பூதம்-தோன்றியது.]

புண்ணியமிகுதியாலே சுவர்க்கலோகத்திலே சென்று, பூதசார உற்பூதமாகிய தூலதேகத்தைத் தரித்து, அதிக சுகத்தை அநுபவித்து, முடிவிலே தூலதேகத்தை விடுவர்.

பாவமிகுதியினாலே நரகலோகத்திற் சென்று, பூத உற்பூதமாகிய தூலதேகத்தைத் தரித்து, அதிகதுக்கத்தை அநுபவித்துத் தூலதேகத்தை விடுவர்.

இப்படியே பசுக்கள் கருமநாசமும் மலபாகமும் வருமளவும், அந்த அந்த உலகங்களிலே அந்த அந்த யோனிகளிலே மாறி மாறிப் பிறந்திறந்து போகம் புசிப்பர்.

[யோனி-காரணம், ஆகிருதி.]

முத்தி சாதனம்.

முத்திசாதனமாவது, முத்தியை முடிக்குங் கருவியாம். தீக்ஷையும், அதற்கு அங்கமாகிய ஞானம், யோகம், கிரியை, சரியை என்பவைகளுமே முத்திசாதனங்களாம்.

ஆன்மாவுக்குப் பாசத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக்கிரியையே தீக்ஷை எனப்படும்.

[தீ-கொடுப்பது. க்ஷை-கெடுப்பது.]

ஆதிகுருவாகிய சிவனுடைய நியமப்படி குருடாகளாற் செய்யப்படுவனவாகிய சிற்சத்திக சிரியையும், மனக்கிரியையும், வாக்குக்கிரியையும், சரீரகக்கிரியையும், பிறவுந் தீக்ஷை வெளிப்படுதற்கு இடங்களாயிருத்தலால், உபசாரக்கிரனுலே தீக்ஷை என்று சொல்லப்படும்.

மலபரிபாக பேதத்தினுலே தீக்ஷை அநேக பேதமுடையதாயிருக்கும்.

ஞானமாவது, பதி பசு பாசங்களின சுவரூபங்களை உள்ளபடியறிந்து, பாசநீக்கலின் வேட்கையுற்று, அநாதிசுத்த அகண்ட பரிபூரண நித்திய வியாபக சச்சிதானந்த ரூபனுய் நின்ற நிட்களாதீத பரசிவனிடத்திலே, அறிவுத் தொழின் மாத்திரத்தாலே செய்யுஞ் சேவை.

யோகமாவது, சிவனுடைய நிட்கள அரூபசரீரத்தைக்குறித்து, ஞானுங்கமாகிய அகத்தொழிலினுலே செய்யுஞ் சேவை.

கிரியையாவது சிவனுடைய சகள நிட்கள ரூபாரூப சரீரத்தைக் குறித்து, ஞானுங்கமாகிய அகத்தொழில் புறத்தொழில் என்னுமிரண்டினுலுஞ் செய்யுஞ் சேவை.

சரியையாவது, சிவனுடைய சகள ரூப சரீரத்தைக் குறித்து ஞானுங்கமாகிய புறத்தொழிலாற் செய்யுஞ் சேவை.

சிவனுக்கு மூவித சரீரமுந் தியான பூசாதியின் பொருட்டுக் கற்பிதமாம்.

அறிவுத் தொழிலாவன, சிற்சத்தி வியாபார ரூபமாகிய நிராகார சிவபாவனை முதலியன.

அகத்தொழில்,—மனே வியாபார ரூபமான சாகார சிவத்தியானம் உட்பூசை முதலியன.

புறத்தொழில்,—சரீரவியாபார ரூபமான சரீரசுத்தி, சிவசின்னதாரணம், சந்தியாவந்தனம், இலிங்கபூசை தோத்திரம், செபம் முதலியன.

சேவையாவ[illegible], ஆமாகிய சிவனுடைய [illegible]
[illegible]யாசசிடையும், சமமுடைய பெருந்தாமரையை [illegible]
[illegible]மை [illegible]யாதுமாறொருடுடுக சிவனே [illegible]ட [illegible]
[illegible]கருணையையும் உணராது, [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]

[illegible]யோகமுமு [illegible]யையும் [illegible]
[illegible]பசாபகமாம். [illegible]ரமு தகைக்கக்கு அங்கமாக
[illegible] [illegible] முதிசாதனங்[illegible]

[illegible]லமாகிய [illegible]மிருலை தீக்கையிற குறையை
[illegible]ருக்கு [illegible]யோகம முதலியன முறைமுறையை
[illegible]

தீக்கையு[illegible], ஞானமும, யோகமும, கிரியையும, சரியையும [illegible]ரிபுணணியங்கள் எனப்படும

கருணாசமுமு மலராகமும [illegible]ணடாகியபோது ச
[illegible]தி [illegible]ராகமும மலசசதி நிவிராதியும, சமஸார
[illegible]வராகிய [illegible]ம, சிவபதியும முறையே உணடாக
[illegible]ணடாகவே, சிவதரிசன வேடகையும குருதேதி
கையும் [illegible]ணடாம அவவிரபபட அதிதவிர [illegible]க
[illegible] சிவனே குருவாகிவந்து தீக்கைசெய்து
ஞானமுபதேசித்து முதிதிகொடுபபன அவவிதபபட
[illegible] தீவிரபகுவா மந்தபகுவா முதலியவாகிய ஞாகு
ஏறற ஒரு குமாரதியை அதிடமாதுரினறு சி
வனே தீக்கைசெயவன. [illegible]கக்குறையிருலே தீ
க்கையின பினபு சிவசாதிரங்களைக் கேடடல [illegible]
[illegible]தல தெளிகல நிடடை எனபவறருல அபரோ
னம பெறறு, யோகம கிரிய சரியை எனபவை
களை ஏறறடி அனுடிதது ஏறாபடி பதமுதிதிக
ளையும பரமுதிதியையும அடைவா

சீடனிடதிலே சிரதை, [illegible]தி, விரயம முதலி
ய குணங்கள இலவழியுட, குருவினிடதிலே [illegible]
[illegible], கருணை [illegible]சாரம முதலிய குணங்கள இலவா
[illegible] [illegible] சிவாதிடடாரமு, சிவானுகர
[illegible] [illegible]ணடால இலலை

முடிவு

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீமஸ்ரீ.

பண்டிதர் அவர்களுடைய

மாணாக்கராகிய

ஆவரங்கால் ம-ா-ா-ஸ்ரீ.

சி. குமாரவேற்செட்டியார்

சொல்லியது.

பரவியடல் சமயநூல் பலவுங் கற்றுப்
பரசமய கோளரியாய்ப் பழிப்பில் சீர்த்தி
விரவுசிவா கமமுழுதுந் தேர்ந்த நாதி
மேவுதிரி பொருளுண்மை விளங்கக கூறி
கருதிடுசை வப்பிரகா சனமே யன்றிக்
காசினியிற் பலநூல்க ளுரைகள் செய்தான்
மருவெனக்குஞ் சிலநூல்க ளுணர்த்தி நீர்வை
மன்னியசாங் கரதேவ வள்ளலுனே.

பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி	பிழை.	திருத்தல்
௩	௩	இரண்டாது	இரண்டாவது
௪	௨௧	ங்களும்	ங்களும்,
௧௨	௧௫	வாக்கியம்	வாக்கியம்,—
௧௩	௧௩	சபக்ஷ	சபக்ஷம்
,,	,,	விபக்ஷம்	விபக்ஷம்
௧௫	௧௧	பக்ஷத்	பக்ஷத்
௨௨	௨௩	உபமர்	உபமா
௨௩	௨௩	ங்களும்	ங்களும்
௫௪	௫	அ, கருவி	அ—கருவி
,,	௧௫	யுடையதும்.	யுடையதும்,
௫௮	௪	யப்பொ	யப்பொ
,,	௨௧	தக்ஷிண	தக்ஷிண